
# சிரித்திரன்


## சுவை மீட்டல்




ஐப்பசி, கார்த்திகை - 1991 விலை: ரூபா: 15-00

# சுவை மீட்டல்


மெயில்வாகனத்தார் துளிக்கப் போறியளோ?
இல்லே.. கொழும்புக்குப் போறன்...வழியில் எல்லாம் திறந்து பார்கிறாங்களாம்.. அதுதான் இப்படி..
Siva


வதந்தி
சமூக விரோதி
பொதுசனம்

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சீவியம்

நகை - 30 ஐப்பசி, கார்த்திகை 1991 சுவை - 3


## நிலைக் கண்ணாடி

# கடையவர்!

விஞ்ஞானம் வளர்ந்து சந்திரனைத் தொட்டுவிட்டது. செவ்வாயை, சுக்கிரனைத் தொடுங்காலம் நெருங்கி வருகின்றது. அண்டவெளி இன்று விஞ்ஞான ஒளியில் துலங்கிவருகின்றது.

இருந்தும்.......?

இன்று - யாழ்குடாநாட்டை இருள் கௌவி இருக்கின்றது.

மின்சாரம் தடைப்பட்டதும் கைவிடப்பட்டு தூசி படிந்துபோன கைவிளக்குகள் கையிலேந்தப்படுகின்றன. இந்தக் கைவிளக்குகளின் எச்சியில் தான் -கூசு ஒளியில்தான் -அடுக்களை வேலைகள் தடுமாறி ஒருவாறு உருவாகின்றன; மாணவர்களின் கல்வி நடக்கின்றது, தத்தித் தடுக்கி!

தொழிற்சாலை இயந்திரங்கள் எல்லாமும் சிலந்தி வலைகளால் போர்த்துவிடப்பட்டுக் கிடக்கின்றன.

இது ஒரு புறம் - மறு புறமோ, விலைவாசி விஷம் தலைக்கேறிவிட்டது. மண்ணெண்ணெய் விலை! தேங்காயெண்ணை விலை! சவர்க்காரம் விலை! எல்லாமே ஏறு ஏறு சங்கிலி! இறங்கு இறங்கு சங்கிலி என ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கின்றன.

நாங்கள் இன்று இருமுனைப் போராட்டம் நடாத்த வேண்டி இருக்கின்றது! ஒன்று அரசபடையுடன்; மற்றது சுயநலக்கடை முதலாளிகளுடன். கடைக்காரர்கள் கண்கட்டு வித்தையில் கைதேர்ந்தவர்கள். காலையில் கண்முன் கிடக்கும் எண்ணெய்ப்போத்தல் மாலையில் மறைந்து போகின்ற மாயத்தை யாமறியோம்! இராணுவம் தான் குண்டு போடுகின்றது என்றால், நம்மவர்கள் விலைவாசி விஷவாயுவை வீசி மூச்சுத் திணறப்பண்ணுகிறார்கள்!

தவிர -


ஒற்றையாட்சியின் கீழ் நாம் பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்டிருந்தோம்; எமது பொருளாதாரநிலை பற்றி மகுடியார் கூறுகின்றார்: "கடல் சூழ்ந்த நாட்டில் தகர மீன் (ரின் மீன்) இறக்குமதி செய்வதுதான் எனக்குப் புரியாத புதிர்!" என்று. பப்படம், ஊறுகாய், ஊதுபத்தி செய்வதில்தான் இதுவரை எமது பொருளாதார பக்தி இருக்கின்றது.

ஆனாலும் இன்றைய நிலை மாறிவருகின்றது.

அந்நியர் ஆதிக்கத்தில் ஈனசுரத்தில் முனகிய எமது பொருளாதார சுருதி, எழுச்சிகானமாய் ஓங்கி ஒலிக்கத் தொடங்குகின்றது. ஆம்! தொழில் வளப்பாதையில் நாம் முன்னேற்றக் காலடி எடுத்து வைத்து விட்டோம்.

நீதித் தராசு ஒருபோதும் பொய்த்துப் போவதில்லை! அது சமநிலை காட்டும் காலம் நெருங்கிவருகின்றது, எதிரியின் பொருளாதார மிரட்டலுக்கும், எமது கடையவர் கடை வேலைகளிற்கும் தீர்ப்பு வழங்கப்படப் போகின்றது.

# மகுடி கேள்வி பதில்கள்



செ. மனோபவன் - மருதனாமடம்

* எமது போராட்டத்தைப் பற்றிச் சற்றுக் கூறும்?
● விலங்கு பூட்டப்பட்ட மக்கள் எங்கே விலங்குகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் முன்மாதிரியான முரசு முழக்கம்.

செல்வி புஷ்பகலா பரமானந்தன் - வல்வெட்டித்துறை

* பெண்ணின் முகம் எப்போது சோபை இழக்கின்றது?
● மூக்குத்தி அணிந்து மூக்கைச் சிமிட்டும் போது.

திருமதி நாகபூரணி தம்பிராசா - பூநகரி

* ஒரு குடும்பத்தில் எப்போது மகிழ்ச்சி நிலவுகின்றது, எப்போது வேற்றுமை நிலவுகின்றது?
● சம்பளதினத்தன்று சீதளம், சம்பளம் முடிந்தபின் போர்க்களம்.

திரு. க. ஞானலிங்கம் - ஆவரங்கால்

* ஒரு பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் எப்படியானது?
● பத்திரிகையின் மூளைஸ்தானம்.

செல்வன் குமாரவேல் - கரவெட்டி

* தமிழீழம் எப்படி இருக்கும்?
● குருதி உரத்தில் வளரும் விருட்சம் ஆனந்த அமிர்தம் தரத்தான் போகின்றது.

செல்வி குங்குமநாயகி - மானிப்பாய்

* எமது மேலானது?
● அகதிகளை ஆதரிப்பது ஆண்டவனை ஆதரிப்பதிலும் மேலானது.

சவரிமுத்து - தும்பளை

* பாசம் எப்படிப்பட்டது?
● கொள்ளி வைக்கும்.

செல்வன் பஞ்சசீலன் - கொடிகாமம்

* ஒலிம்பிக்கில் ஓடுபவர்களை சாதனை வீரர் என்கிறார்களே!
● எங்கள் இராணுவ வீரர்கள் ஆயுதத்தைப் போட்டுவிட்டு ஓடும் ஓட்டம் தெரியாது போலும்.

சிவனேசன் - கிளிநொச்சி

* ஆண்களிடம் அடிமைப்பட்ட பெண்களின் நிலையா, அல்லது பெண்களிடம் அகப்பட்டுத் தவிக்கும் ஆண்களின் நிலையா பரிதாபமானது?
● அடிமை என்ற சொல்லை அகராதியிலிருந்து நீக்கவே இந்த விடுதலைப் போர்.

செல்வன் இரவிச்சந்திரன் - அச்சுவேலி

* வறட்சி வந்தால். . . . . . ?
● குளம் வற்றும், குதம் வற்றாது.

செல்வி ரதிதேவி - நல்லூர்

* முனி புங்கவ! உமக்குப் புரியாத புதிர் யாதோ?
● இறக்கப் போகும் மனிதனின் இடுப்பில் திறவுகோல் இருப்பதே எனக்குப் புரியாத புதிர் அம்மணீ.

செல்வன் நரேஸ்குமார் - சுழிபுரம்

* கலை மாணவனிற்கும், விஞ்ஞான மாணவனிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?
● கலைக்குப் பாடத்தெரியும்; விஞ்ஞானத்திற்குப் பாட்டைப் பதிவு செய்யத் தெரியும்.

செல்வன் த. சுதன் - கரவெட்டி

* இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா இப்போது கொழும்புத் தமிழரைப்பற்றி என்ன நினைப்பார்?
● பருந்து, தனக்கு விருந்தாகப் போகும் கோழிக் குஞ்சுகள் தனது செட்டைக்குள்ளேயே குளிர் காய்கின்றனவே என உவகை கொள்ளும்.

செல்வன் க. பவானந்தன் - மீசாலை

* விமானங்கள் 'அசிற்' ஊற்றுகின்றனவே?
● அந்த அவமானங்கள் அச்சத்தில் விஷ எச்சம்

போடுகின்றன.

செல்வன் வேல்முருகன் - சங்கானை

* ஆறில்லாத ஊர்....?
● ஆறுதலில்லாத ஊர்!

செல்வி பூர்ணிமா ஸ்ரீதரன் - சண்டிலிப்பாய்

* உமக்குப் புரியாதது எது?
● ஜீவகாருண்ய ஜீவிகளாகிய பௌத்த மக்கள் ஏன் தமிழர்களின் பிறப்புரிமையைப் பறிக் கிறார்கள் என்பதுதான்......

செல்வி சுகன்யா சின்னையா - உடுப்பிட்டி

* நீங்கள் ஓர் இசைப்பிரியர் போல் இருக்கின்றது ஒரு பாட்டுப் பாடுங்களேன்......?
உங்களுக்கு எந்தப் பாட்டு பிடிக்கும்?
● இந்த மண் எங்களின் சொந்த மண்....
என் இனமே என் சனமே.......
நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்......
எது வேண்டும்?

செல்வி குமுதினி குணராசா - வேலணை

* உமக்கு மேடைநாடகம் பிடிக்குமா அல்லது திரைப் படம் பிடிக்குமா?
● கலை என்ற சட்டத்திற்குள் உயிர்த்துடிப்புள்ள ஓவியமாக அமைந்தால் இரண்டையும் இரசிப் பேன்.

ப. கருணாகரண் - சுழிபுரம்

* விமானத்தைப் பற்றி உமது கருத்து என்ன?
● அவர்கள் வானம்பாடிகளல்ல, வானத்துப் பேடி கள்! நிராயுதபாணியாக இருக்கும் அப்பாவி மக்க ளிற்கு குண்டு போடுகின்றார்களே!

செல்வன் ஆனந்தகுமார் பொன்னையா - வரணி

* அனுதாபம் என்பது என்ன?
● அனுதாபம் - இருளில் வெளிச்சம்;
கோபம் - வெளிச்சத்தின் மத்தியில் இருள்.

செல்வன் தமிழ்நேசன் - பண்ணாகம்

* மனிதனின் பண்பு எவ்வாறானது?
● சுதந்திரக் காற்றை உலக மனிதர் எல்லோரும் சுவாசிக்க வேண்டும் என்றெண்ணுவது மனிதப் பண்பாடு.

## முரண் முறுவல்

"தமிழர்களிற்கு என்ன பிரச்சனை இருக் கின்றது என்று எனக்குப் புரியவில்லை!"

**- ஜே. ஆர். ஜெயவர்த்தனா -**

"ஜே. வி. பி. யினர் ஏன் குழப்பம் விளை விக்கிறார்கள் என்று எனக்குப் புரிய வில்லை! புலிகளாவது ஒரு இலட்சியத் திற்காகப் போராடுகிறார்கள், இவர்கள் எதற்காகப் போராடுகிறார்கள்?"

**- ஜே. ஆர். ஜெயவர்த்தனா -**

*** உந்தத் தமிழ் அரசியல்வாதிகள் வில்லுப் பாட்டில் பயிற்றப்பட்டவர்காளா?**
**● ஏன்?**
*** சிங்கள அரசியல்வாதிகளுக்கு அவர்கள் ஆமா ஆமா போட்டதுதான் மிச்சம்.**

## குஞ்சரம் ஊர்ந்த ஊர்

**யாழ்ப்பாணத்திற்கும் யானைக்கும் நிறையச் சம்பந்தம் இருக்கிறதோ?**

அவ்வாறுதான் கருத முடிகிறது - யாழ் மாவட் டத்தில் யானையுடன் உறவுடையதாக பல ஊர்களின் பெயர்கள் அமைந்திருக்கின்றனவே - ஆனைப்பந்தி, ஆனைவிழுந்தான், ஆனையி றவு, ஆனைக்கோட்டை என்று பல. முன் பொரு காலத்தில் யானைகள் கட்டப்பட்ட இடம்தான் இன்றும் 'ஆனைப்பந்தி' என அழைக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு அந்தந்த ஊர்களிற்கும் சம்பந்தம் இருக்க வேண்டும். கொஞ்சம் ஆலோசித்துப் பார்த்தால் -அக்காலத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் படையணிகளில் யானைப்படைக்கு முக்கியத்துவம் இருந்திருக்க வேண்டும். அல்லது, யானைகளின் உழைப்பு டன் சம்பந்தமான தொழில்கள் ஏதாவது முன் னணியில் இருந்திருக்க வேண்டும். யானை யில் சவாரிகளும் அக்காலத்தில் நடைபெற்றி ருக்கின்றன.

# விட்டு விடுதலையாகி...

அஸ்வதி

"நான் என்னப்பா செய்யிறது? எத்தனைதரம் அவனுக்குச் சொல்லிப்போட்டன். 'அவங்களோட' திரிய வேண்டாம் எண்டு. அவன் கேட்கிறானே. நீங்கள் என்னண்டால் நான்தான் அவனைக் கெடுத்தது மாதிரியல்லே கதைக்கிறியள்" சொல்லிக் கொண்டே அடுப்பிலிருந்து கேத்ததை இறக்கிச் சுடுதண்ணிப் போத்தலினுள் நீரை விட ஆரம்பித்தாள் கனகம்.

"இஞ்சரப்பா உதுக்கு நான் ஒரு வழிசெய்யிறன். கெதியாத் தேத்தண்ணியைத் தா" குசினித்தட்டில் இருந்து காலாட்டிக் கொண்டிருந்த அச்சுதம்பிள்ளை மாஸ்ரர் சுற்றி ஒரு தடவை கண்களை ஓட விட்டார். மாபிள் பதித்த சுவர்.... சாமான் சக்கட்டு வைத்து எடுக்க சீமெந்துத்தட்டு...... போர்மிகா ஒட்டிய நீண்ட அலுமாரி மிக்ஸி போன்ற மின்சார உபகரணங்கள்...... காஸ் குக்கர்.... எவர்சில்வர் பாத்திரங்கள்.... ம்... இதெல்லாம் அவங்கள் மூண்டு பேரும் கனடாவிலை இருக்கிறபடியா லெல்லோ" வாய் விட்டுச் சொன்னார்.

"கொதிக்கக் கொதிக்கக் குடிக்கப் போறியளோ. ஆத்தித்தரமுன்னம் என்ன புறுபுறுப்பு"

"இல்லை அவன் கொஞ்சம் வளந்தவன் எண்டாலும் பரவாயில்லை தமையன் அவங்களெட்டை அனுப்பிப் போடலாம். இல்லாட்டில் ஒரு கலியாணத்தைக் கட்டிக் குடுத்து ஒரு மாதிரிச் சமாளிக்கலாம். இவனுக்கு வாற ஆடியோடை பன்ரண்டு வயது தானே முடியுது."

"உந்த வயதிலை எத்தினை பொடியள் காதலிச்சுக் கொண்டு திரியுதுகள். இவன் அப்படி ஏதும் செய்தாலும் போக்கு மாறும்." தேனீர்க்கப்பை மாஸ்ரரின் பக்கத்தில் கனகம் வைத்தாள்.

"பொடியன்ரை கவலையிலை நீ எனக்குச் சீனி போடாமல் தேத்தண்ணி தந்திருக்கின்றாய்."

மெல்லச் சிரித்தாள். மாஸ்ரர் தொடர்ந்தார் "உதுக்கப்பா நான் ஒரு உளவியல் ரீதியான அணுகுமுறையைத்தான் கையாளப் போறன். சரிவாறானோ எண்டு பாப்பம்."

தேனீரைக் குடித்துவிட்டுக் கப்பைப் பக்கத்தில் வைத்தார். "முந்தியெல்லாம் அவன் சில சாப்பாடுகள் சாப்பிடுகிறதில்லை. இப்ப என்ன குடுத்தாலும் சாப்பிட்டு முடிக்கின்றான் வெறுப்புக் காட்டிற தில்லை" கனகம்.

அவனுடைய வளர்ச்சியும் பக்குவமும் அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"ராத்திரி முழுக்கத் தலையிடி எண்டனி, பலகாரம் ஒண்டும் தேட வேண்டாம், நான் வரேக்கை பாண் வாங்கிக் கொண்டு வாறன்" தட்டிலிருந்து இறங்கி வெளியில் போனார் மாஸ்ரர்.

"இதென்ன புதிசா ஒரு கூண்டு வாசலிலை தூங்குது" கேற் திறக்கும் போதே புதிய வரவைக் கவனித்து விட்டான் அரவிந்தன்.

"அம்மா...... அம்மா....."

"கை விட ஏலாது ராசா. குசினிப் பக்கத்தாலை வாவன்." குசினியில் நின்று குரல் கொடுத்தாள் கனகம். குரோட்டன் செடிகளில் ஒரு கையால் தடவியபடி குசினிப் பக்கத்துக் கதவை நோக்கி நடந்தான் அரவிந்தன்.

சிறுகதை

"இந்த வெயிலுக்கை எங்கை போனனி? ஏதாவது கரைச்சுத் தரட்டே?" முதற் கேள்விக்குப் பதில் கிடையாது என்று தெரிந்தும் கேட்டு வைத்தாள்.

எனக்கு ஒண்டும் வேண்டாம். நான் இந்தப் புத்தகத்தை வாசிச்சுப் போட்டுப் பின்நேரம் திருப்பிக் குடுக்க வேண்டும். என்னைக் கரைச்சல் படுத்தாதேங்கோ." தேன் கூட்டுத் தாடிக்காரச் கிழவன் ஒருவரின் அட்டைப்படம் போட்ட புத்தகத்தைத் தாய்க்குக் காட்டினான்.

"உது பாடப் புத்தகமே ராசா"

"இல்லை. வாழ்க்கைப் புத்தகம்." தனது அறையை நோக்கி நடந்தான். சமையல் நடந்து கொண்டிருந்தது.

குசினி வாசலில் உருவம் ஒன்று அசைவது தெரியவே கனகம் திரும்பிப் பார்த்தாள். "ஆ.... வந்திட்டியளே? ஆள் வந்திட்டார். ஆளைவிடப் பெரிய சிவப்புப் புத்தகம் ஒண்டு படிக்கிறார். தன்னைக் கரைச்சல் படுத்த வேண்டாமாம்." சன்னமான குரலில் கனகம் சொன்னாள்.

"படிக்கட்டும்.... படிக்கட்டும். சாப்பிட்டாப் போலை அவரோடை ஆறுதலாய்க் கதைப்பம். எனக்குக் கொஞ்சம் தேசிக்காய் கரைச்சுத் தாவனப்பா."

தனது அறையிலிருந்து வெளியில் வந்தான் அரவிந்தன். "அப்பா அந்தக் கிளிக்கூண்டு ஆர் கொண்டு வந்தது?"

ஒரு வெற்றியான பார்வை கனகத்தைப் பார்த்தார் மாஸ்ரர். இருவரும் புன்னகைத்துக் கொண்டனர். "அது நான் தான் கொண்டு வந்தனான். லீவுக்கை சும்மா இருக்கிறனி பிராக்கா வளப்பாய் எண்டு கொண்டு வந்தனான்."

"மூண்டு நாலு வரியத்துக்கு முந்தி நான் விரும்பிக் கேட்ட நேரம் வாங்கித் தரேல்லை இப்ப என்னத்துக்கு."

"கோவப்படாதை ராசா இப்பத்தான் காலம் வத்தது எண்டு நினையன் எல்லாம் நாங்கள் நினைக்கிறபடியே நடக்குது." மாஸ்ரர் பெருமூச்சு விட்டார்.

"கிளி வளக்க இதுவே காலம் - ஒவ்வொருத்தரும் தங்கடை தங்கடை உயிரைக் காப்பாத்தப் படுறபாடு, எனக்கு உது தேவையில்லை."

"உனக்குத் தேவையில்லை எண்டால் கிடக்கட்டும் அது நாங்கள் வளப்பம்." கனகம் உரத்த குரலில் சொன்னாள்.

அரவிந்தன் தாயை ஓர் ஏளனப் பார்வை பார்த்தான். "நீங்கள் எல்லாம் இந்துக்கள்...... இல்லை வேண்டாம்... மனிசர் என்ற பெரிய வட்டத்துக்கையே அடங்காத நீங்கள் இந்துக்கள் எண்ட சின்ன வட்டத்துக்கை எப்படி அடங்குவியள். அந்தக் கிளியைத் திறந்து விட்டு விட வேணும். வாத்தியாருக்கு ஜீவகாருண்யம் எண்டால் என்னெண்டு தெரியுமே? தன் நிலைமறந்து தகப்பனை ஏளனம் செய்தவன் நாக்கைக் கடித்துக் கொண்டான். தகப்பன் பற்றித் தாயுடன் கதைக்கும் பொழுது வாத்தியார் என்று சொல்வது அவன் வழக்கம்.

"மனிசரைச் சுட்டுத் தள்ளிற நீங்கள் ஜீவகாருண்யம் பற்றிப் பேசிறியளோ" மாஸ்ரர் கொஞ்சம் காரமாகவே கேட்டார். நீங்கள் என மாஸ்ரர் குறிப்பிட்டது அரவிந்தனுக்கு மிகவும் சந்தோசமாயிருந்தது.

"அப்ப, அப்பா பகவத்கீதையும் படிக்கேல்லை ஏன் பிரச்சனையை வேறை பக்கம் திருப்புவான். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ. உங்களை ஒரு கூட்டுக்கை விட்டு நேரத்துக்கு நேரம் சாப்பாடு போட்டால் சாப்பிடுவியளோ, 'நாங்கள்' கையிலை ஆயுதம் எடுக்கும் வரைக்கும் அப்பிடித்தானே சாப்பிட்டனீங்கள். அதுவும் நீங்கள் விரும்பின சாப்பாடே போட்டவங்கள். தாங்கள் விரும்பின எலும்புத் துண்டெல்லே போட்டவங்கள். அந்தக் கிளியள் வாய் பேசாத ஜீவன்கள். ஜென்மத்துக்கும் அதுகளுக்கு அதுதான் நிலமை எண்டில்லை. உங்களை மாதிரி மனிசருக்கெதிரா அதுகளும் ஒரு நாளைக்குத் துவக்குத் தூக்கலாம். இது ஒவ்வொருவரும் தன்னைத் தானே உணருகிறகாலம், ஒண்டையும் மூடிவைக்க ஏலாது." உணர்ச்சி வசப்பட்டவனாய் பேசி முடித்தான் அரவிந்தன். இவனுக்கு பன்னிரண்டு வயது தானா என்ற சந்தேகம் தாயின் மனதில் தோன்றியது.

"கொண்ணன் அவங்கள் மூண்டு பேரும் இருந்தாங்களெண்டு ஒரு நாள் எதிர்த்துப் பேசியிருப்பாங்களே, நீ என்னடாவெண்டால்.... தகப்பனை" அரவிந்தன் இடைமறித்தான்.

"உந்தக் கிளியள் மாதிரித் தானே அவை கனடாவிலை இருக்கினம். தங்களைப்பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டு" சொன்னவன் எழுந்து சென்று வாசலில் நின்று கிளிக் கூண்டைப் பார்த்தான். கனகமும் மாஸ்ரரும் பின் தொடர்ந்து வாசலுக்கு வந்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)



"அந்நிய நாட்டிலிருந்து பணம் வந்த பிறகு கனகம் மாவுக்கு தலை வீக்கம்!"
"ஏன்"
"இப்பவெல்லாம் அவள் விலைகேட்காமலே மீன் வாங்குகிறாள்".

# விட்டு விடுதலையாகி.....

( 7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"கூண்டோடை மோதி மோதி அதுகள் வெளியிலை போக முயற்சிக்கிறதைப் பாருங்கோ" கூண்டை இறக்கிக் கீழே வைத்தான். அவனுடைய கண்கள் கலங்கியிருந்தன. கதவைப் பிணைத்திருந்த கம்பியை மெல்ல விலக்கினான். சிறிது தயங்கியபின் விர்ரென்று இரண்டு கிளிகளும் மேலே பறந்தன. கூண்டைச் சுழற்றிக் குரோட்டன் செடிகள் நின்ற பக்கமாக வீசினான்.

கனகமும் மாஸ்ரரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தோல்வி இழைகள் மாஸ்ரரின் முகத்தில் ஓடியது.

"அரவிந்தன், அப்பாவோடை வாக்குவாதப்பட்டது போதும் நீ நினைச்சதைச் சாதிச்சுப் போட்டாய். வா ராசா சாப்பிடலாம். "

"அம்மா.... இனி என்னை 'லூதர்' எண்டு கூப்பிடுங்கோ" சொல்லிக் கொண்டே தன் அறையில் நுழைந்தவன் தேன் கூட்டுத் தாடிக்காரக் கிழவனின் அட்டைப்படம் போட்ட புத்தகத்தை மீண்டும் கையில் எடுத்துக் கொண்டான். உரத்து வாசிக்க ஆரம்பித்தான்.......

"...... என் ப்ரிய ஜனங்களே!
உங்களுக்கே சொந்தமான இதமான வீடுகளில்
இருந்து கொண்டும் நீங்கள் ஏன்
பூட்டப்பட்டும், பிணைக்கப்பட்டும்
புதைந்து போகிறீர்கள்.....?"

★



"எங்கட பங்கருக்கு சீமெந்து பூசியிருக்கு. "
"ஏன்?"
"எங்கட அப்பா, மா, சீனி பதுக்கி வைக்க"
- கருணாகரன் -

- கருணாகரன் -

# முரண் முறுவல்

* "கிளிநொச்சி மக்கள் பட்டினியால் அவலம்!"
செய்தி.
"கிளிநொச்சிக்கு மலத்தியோன் வந்தது!"
செய்தி.

* "எமது உடன் பிறவாச் சகோதரர்களிற்கு இனியும் இன்னல் நேர்ந்தால் இராமேஸ்வரத்திலிருந்து 1000 படகுகளில் படையுடன் வருவோம்!"
சுப்பிரமணிய சுவாமி (அன்று)
"இன்றைய ஈழத்தமிழர் தலைவர் பிரபாகரனையும் அவரது தளபதி கிட்டுவையும் இலங்கை அரசு பிடித்து எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லையேல் எமது இந்தியப்படை போய் கைது செய்துவர வேண்டும்!"
சுப்பிரமணிய சுவாமி (இன்று)

* "ஈழத்தமிழரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் விடுதலைப் புலிகளே. அவர்கள் அழிக்கப்பட்டால், ஈழத் தமிழினமே முற்றாக அழிந்து விடும். எனவே தமிழக மக்கள் அவர்களிற்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயங்கக் கூடாது!"
ஜெயலலிதா (தேர்தலிற்கு முன்)

"ஈழத் தமிழ் அகதிகளையும், விடுதலைப் புலிகளையும் இனம் பிரிப்பது கடினமாக உள்ளது. எனவே பாகுபாடின்றி அனைவரையுமே தமிழகத்திலிருந்து வெளியேற்றிவிட வேண்டும்!"
ஜெயலலிதா (முதலமைச்சராகிய பின்)

* கொக்கட்டிச் சோலையில் இராணுவத்தினரால் நூற்றுக்கணக்கான தமிழர் வெட்டிக் கொலை.
- செய்தி -
"வாளெடுத்தவன் வாளாலேயே மடிவான்"
- ஸ்ரீலங்கா ஜனாதிபதி-
பிரேமதாஸா

## விஷம்

**குட்டிப் பாம்பொன்று தாய்ப் பாம்மைக் கேட்டது: "அம்மா, அப்பா எப்படி இறந்தவர்?"**

**தாய்பாம்பு சொன்னது: "ஆளைத் தெரியாமல் உளவு சொல்லுற ஒருத்தனைக் கடித்து, அவனுடைய விஷம் பாய்ந்து இறந்து போனார்!"**

# மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்!

**"மடமையைக் கொழுத்துவோம்"**
போட்டியில் ரூபா 100/- பரிசு
பெறும் கட்டுரை.

காலம் காலமாய் பெண்இனம் பலவிதமான அடக்குமுறைகளுக்கு உட்பட்டு வருகின்றது. இவ்வடக்குமுறைகளைத் தகர்க்கவும், பெண்கள் எழுச்சி பெறவும் வேண்டி 'மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என உரத்துக் குரல் கொடுத்த ஓர் உணர்ச்சிக்குயில் மகாகவி பாரதி.

பெண் இனத்தின் உரிமைகளை மறுக்கின்ற நாடோ, ஒரு சமுதாயமோ அல்லது ஒரு வீடோ முன்னேற்றங்காணுவதில்லை. எமது சமூகத்தைப் பொறுத்த அளவில் பெண்கள் விழிப்படைந்து வருகின்றார்கள். எனினும், முழுமையான விழிப்பு இன்னமும் ஏற்படவில்லை. பல்வேறு வடிவங்களில் இப்போதும் பெண்கள் அடக்கப்படுகின்றார்கள். ஒடுக்கப்படுகின்றார்கள்.

படைப்பு ரீதியாக, பாலியல் வேறுபாட்டினால் பெண்கள் பலவீனமானவர்கள் என்னும் கருத்து சிறுவயதிலேயே பெண்களுக்கு ஊட்டப்படுகின்றது. இது நாளடைவில் உளவியல் ரீதியாகப் பெண்களைப் பாதிப்படைய வைக்கின்றது. அன்று தொட்டு இன்றுவரை இலக்கியங்களும், இதிகாசங்களும் கூட பெண்களை சுயசிந்தனை மிக்கவர்களாகச் சித்தரிக்கவில்லை.

பெண்கள் அடக்கப்படுவதற்கு அல்லது அடங்கிப் போவதற்கு முக்கியமான காரணம் இவர்கள் பொருளாதார ரீதியில் பெற்றவர்களை, புருஷனைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாய நிலையாகும். இந்நிலை தகர்க்கப்படுமானால் பெண்களின் விழிப்புணர்வு முனைப்புப்பெறும்.

மேலும், இன்று வெளிநாடுகளிலுள்ள இளைஞர்களுக்கு திருமண நோக்கிற்காக இங்குள்ள பெண்கள் அனுப்பி வைக்கப்படுவது ஒரு விதமான வியாபாரத்தனமானதும், பெண் அடக்கு முறையின் உச்சக்கட்ட நிலையுமாகும். யாழ்ப்பாணத்தில் இருந்து உற்பத்திப் பொருட்கள் விலை பேசப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுவதற்கு இது எந்த விதத்திலும் பின்னிற்கவில்லை. இந்த ஈனத்தனத்தில் பாதி பெண்களுக்கே!

இதுதவிர, பெண்கள் ஆண்களால் மட்டுமல்ல.... பெண்களாலேயே பெருமளவில் இழிவுபடுத்தப்படுகின்றார்கள். எத்தனையோ படித்த, உயர்தரக் குடும்பங்களில்கூட பெண்களின் மீது அடக்குமுறை இருக்கின்றது. பெண்விடுதலை என்ற பேரில் சில பண்பாட்டுச் சீரழிவுகள் பெண்களாலும் ஏற்படுகின்றன.

ஆண்கள் உழைப்பவர்களாகவும், பெண்கள் உதவுபவர்களாகவும் இருக்கும் நிலை மாறவேண்டும். அனைவரும் சரிசமமாக வேண்டும். பெண் என்பவள் பூஜிக்கப்படவேண்டியவள் எனும் நிலை மாறி பெண் பெருமைக்குரியவளாக வேண்டும். பெண்களுக்கு பூரண சுதந்திரம் இருக்க வேண்டும். இந்தச் சுதந்திரத்தை பெண்கள் தமது முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டும். சமூகம் பெண்களைச் சிறைப்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

இவ்வாறான ஒரு சகாப்தம் ஏற்படுமானால்.... மாதர்கள் இழிவு செய்யப்படும் நிலை மாறும். நாடும் வீடும் பூரணத்துவம் பெறும்.

**- ஆதிலட்சுமி இராசையா -**

**Mr. டாமோடிரன்:** டார்லிங்!
**Mrs. டாமோடிரன்:** யேஸ் டார்லிங்?
**Mr. டாமோடிரன்:** வட் இஸ் படையல் சாப்பாடு டார்லிங்?
**Mrs. டாமோடிரன்:** சிக்கேயா யூ டோன்ற் நோ டமில் பாஷா? படைகளுக்கு போடுற சாப்பாடுதான் படையல் சாப்பாடு.



## மறுபக்கம்

ஒருவர் முகம்குப்புறப் படுத்திருந்து பாடிக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தின் பின் மறுபக்கம் புரண்டு படுத்திருந்து பாடினார். இதை அவதானித்த ஒருவர் ஏன் முதல் ஒரு பக்கம் படுத்திருந்து பாடினீர், பின் மறுபக்கம் படுத்திருந்து பாடுகிறீர்? என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார் "கசட்" மாற்றிப் போட்டிருக்கு.
- சுழிபுரம் செந்தமிழ் -

# எண்ணத் தோகை

அர்த்தநாரீஸ்வரரை வணங்கும் அவள் -
மகன் மருமகள்
மகிழ்ந்திருப்பதை விரும்பவில்லை!

* * *

இரட்டையராய்ப் பிறந்தவர்களிற்குள்
இரத்தபாசம் இருக்கவில்லை -
பாகப்பிரிவினை அவர்களைப் பிரித்தது!

* * *

அன்றில் பறவைகள் ஏன்
அன்றுடன் தம்மை அழித்துக் கொண்டன? -
எதிர்வரும் நாகரீக உலகம்
விவாகரத்தை
ஏற்றுக் கொள்ளும் என்பதை அறிந்தோ!

* * *

விடுதலைப் புலிகளின் தந்தை -
தசரதன் போல்
புத்திரசோகத்தால் இறக்கவில்லை!

* * *

அரிச்சந்திரன்
தரணியில் இன்று உயிரோடிருந்தால் -
சட்டத்தரணிகள் மேல் வழக்குத் தொடர்ந்திருப்
பான்!

* * *

வேடன்
மயில்தோகையை எண்ணுவதில்லை -
எண்ணமெல்லாம்
மயிலெண்ணெய்யில் தான்!

★ ★ ★

## புகைப் பிரியர்

**தந்தை சிகரட் பிரியர்:** அடிக்கடி புகை பிடிப்பார். அவர் மூக்காலும் வாயாலும் நளினமாக புகைவிட

**குழந்தை தாயிடம் கேட்டது;**"அம்மா, அப்பா பள்ளிக்கூடத்தில 'ஊதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என்றா படித்தவர்.



**நூலகம்:**அறிவுத் தாகமுடையோர் தாகசாந்தி செய்யும் சுனை.

**மந்திரம்:**உள்ளத்தின் அழுக்கை நீக்கும் சவர்க்காரம்.

**ஸ்ரீலங்கா:**உலகில் கழிக்கப்பட்ட பழைய இரும்புகள் போடும் குப்பைத் தொட்டி.

**யுத்தம்:**செந்நீராட்டு விழா

**இராணுவம்:**பஞ்சமா பாதகத்தின் பாதுகாவலர்.

## தானறியாமலே....

தமிழர் தாயகத்தை ஏற்றுக் கொண்டவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்.

அவரா? இனவாதத் தீயை மூட்டி விட்ட முதலாவது புண்ணியவானே அவர்தானே!

உண்மைதான். ஆனாலும், ஐம்பத்தெட்டில் ஒரு இனக் கலவரம் மூண்டதில்லையா? அப்போது தெற்கிலிருந்த தமிழர்களை எல்லாம் கப்பலேற்றி தமிழ்ப் பகுதிகளிற்குத்தான் அனுப்பி வைத்தார் பண்டா. அத்தோடு "இது தமிழர் தம் பாகாப்புக் கருதியே" என்றும் கூடப் பகர்ந்தார்.

அவ்வாறெனில், அதற்குள் உள்ள அர்த்தம் என்ன?

---

## ஐம்பொன்

* தங்கம் துருப் பிடிப்பதில்லை; வாள் வளைவதில்லை

* சிறிய காயத்தையும் ஏழைச் சுற்றத்தையும் அலட்சியம் செய்யாதே.

* அகந்தையால் "இல்லை" என்று சொல்லாதே. பலவீனத்தால் "சரி" என்று சொல்லாதே.

* சொல்லால் கொல்வதும் கொலையே.

* வேலையில்லாமல் இருந்தால் ஆயிரம் நோய்களைக் கொண்டுவரும்.

★ ★ ★

# நாத நாதனுடன்

# சில நிமிடங்கள்...



*அளவையூர் தந்த நாதஸ்வர மேதை பத்மநா தன் அவர்கள் அண்மையில் மணிவிழாக் கண் டார். இசை மகனிற்குக் கிடைத்த கௌரவம் கண்டு தாயக அன்னை பூரிப்படைந்தாள். அதனையொட்டி அவர் தம் இனிய செவ்வி யைத் தருவதன் மூலம் அன்னையவள் பெரு மிதத்திலே உங்களுடன் நாங்களும் கலந்து கொள்கிறோம்.*

நாதத்தின் நாதமாகிய பத்மநாதன், லண்டன் மாநக ரில் முதன் முதலாக நாதஸ்வர கச்சேரி செய்தது மாத்திரமன்றி, அக்கச்சேரிக்கு தேசிய உடை அணிந்து சென்றமையும், மங்கள இசைக்கு தேசிய பெருமை சேர்த்த நிகழ்ச்சிகளாகும். அன்னாரை, சிரித்திரன் சார்பில் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின் றேன்.

(1) நாதஸ்வரம் பற்றி எம் நாட்டு மக்களின் பங்க ளிப்பு என்ன?

"நாம் வாசிக்கும் நாதஸ்வர கருவி பல ஆண்டுக ளாக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு வந்தது. இக்கருவியை எமது சொந்த மண்ணில் உருவாக்க வேண்டும் என்ற எண்ணக் கரு முதன் முதலில் அராலியைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் திரு. அமர லிங்கத்தின் உள்ளத்தில் உருவானது. பல வருட கால விடாமுயற்சியின் பலனாக திரு. அமரலிங்கத் தால் நாதஸ்வரக்கருவி நம் மண்ணில் உருவாக்கப் பட்டது. இக் கருவியை நமது நாதஸ்வர வித்து வான்கள் இன்று பயன்படுத்தி வருகின்ர்கள். தாமும் இக்கருவியை பயன்படுத்தி "இந்தமண் எங்களின் சொந்தமண்" என்னும் எமது மண் பாடலை வாசிக் கும் போது எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகின்றது" என அவர் கூறினார்.

(2) தவிலை ஒரு மிடுக்கான வாத்தியம் என குறிப் பிடுகின்றார்கள். இதன் கருத்து என்ன?

தோல் வாத்தியங்களான மிருதங்கம், கஞ்சிரா, டோல் போன்றவற்றின் இசையை ரசிப்பதற்கு ஒலி பெருக்கியின் உதவி மிகவும் அவசியம். ஒலிபெருக் கியின் உதவியின்றி தனது இசையை இரசிக்கச் செய்யும் சக்தி தவிலுக்குத்தான் உண்டு. எனவே

தவிலை ஒரு மிடுக்கான வாத்தியம் எனக் குறிப்பி டுவது சாலப் பொருந்தும். அப்படியான ஒரு வாத் தியத்தில் தனது நுட்பங்கள் அனைத்தையும் காட்டி, ரசிகர்களின் பெரு மதிப்பைப் பெற்றவர்களில் தவில் சக்கரவர்த்தி தெட்சணாமூர்த்தி, அண்மையில் காலஞ்சென்ற திரு. சின்னராசா, திரு. கணேச பிள்ளை, திரு. புண்ணியமூர்த்தி, திரு. குமரகுரு போன்றோரும், தற்போது வாசித்துக் கொண்டிருக் கும் இளம் தலைமுறையினரும் அடங்குவர்.

(3) மங்கள இசை, கர்நாடக இசையின் பாதுகாவ லன் என்று சிரித்திரன் "மகுடி"யில் கூறியுள்ளார் அதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

கர்நாடக இசை தொன்று தொட்டு மக்களின் நன்ம திப்பைப் பெற்றிருக்கின்து. அதன் பின் எத்த னையோ இசைகள் கையாளப்பட்டு வந்திருக்கின் றன. தியாகராஜா சுவாமிகள், சாமசாஸ்திரி, முத் துச்சாமி தீர்ஷிகர் போன்ற மகா மூர்த்திகளின் தெய் வீகப் பணியால், கர்நாடக இசை இன்றும் இந்தி யாவில் தனக்கென தனியிடத்தை பிடித்துக்கொண் டுள்ளது. அதேபோல இலங்கையில் நாதஸ்வரம் கர்நாடக சங்கீதத்தின் மேன்மைக்கு மெருகூட்டி வருகின்றது.

(4) திருமணத்தின் போது நாதஸ்வரத் தவில் வாத் தியங்கள் இடம்பெறுகின்றன. இதனால் அதனை மங்கள வாத்தியம் என்று கூறுகிறார்களோ அல்லது இதற்கு வேறுகாரணம் உண்டோ?

நாதஸ்வரமும் தவிலும் சங்கீத குடும்பத்தில் கண வன், மனைவி போன்றவர்கள், இருவரும் இணை பிரியா குடும்ப அங்கத்தவர்கள்.

தெய்வீக வாத்தியங்களான நாதஸ்வரமும் தவிலும், ஆலயங்களிலும் மங்கள வைபவங்களிலும் இடம் பெறுகின்றன.

(5) இசைக்கச்சேரியின் போது மிருதங்கம் வாசிக்கப் படுகின்றது. தவிலை இதற்குப் பதிலாக வாசிக்க லாமா? இதுபற்றி உங்கள் கருத்தைக் கூறவும்.

எமது நாட்டில் பல வாய்ப்பாட்டு கச்சேரிகளுக்கு திரு. K. கணேசபிள்ளை, திரு. புண்ணியமூர்த்தி, திரு. குமரகுரு, காலஞ்சென்ற திரு. சின்னராசா போன்றோர் தவில் வாசித்து ரசிகர்களின் கரகோசத் தைப் பெற்றவர்கள்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாத நாதனுடன்...

வலங்கை மான் சண்முக சுந்தரம்பிள்ளை அவர்களின் தவில் வாத்தியம் மண்டலின் சீனிவாசனின் ஒலிப்பதிவு நடாவிற்கு மெருகூட்டியது.

குன்னக்குடி வைத்திய நாதனின் வயலின் கச்சேரிக்கு, வலயப்பட்டி பாலசுப்பிரமணியத்தின் தவில் இனிமை சேர்த்தது.

"கெஞ்செற்" கச்சேரியில், நாதஸ்வரத்தோடு பக்க வாத்தியங்களாக மிருதங்கம், கெஞ்சிரா, தவில் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இக்கச்சேரியில் ஒவ்வோர் வாத்தியத்தினதும் தனித்தன்மை பேணப்படுவது சிறப்பம்சமாகும்.

**(6)** முன்பு மங்கள வைபவங்களில் நாதஸ்வர தவில் வாத்தியங்கள் முக்கிய இடம் பெற்றன. தற்போது இதற்கு பதிலாக ஒலிப்பதிவு நாடாக்களை பயன்படுத்துகிறார்கள். ஒலிப்பதிவு நாடா வந்தபின் நாதஸ்வர தவில் வாத்தியங்களின் எதிர்காலம் என்ன?

இசை சக்கரவர்த்தி திரு. ராஜரட்ணம்பிள்ளை நம்மிடையே இன்று இல்லை. ஆனாலும் அவரது மகோன்னத படைப்புக்களை ஒலிப்பதிவு நாடாவின் மூலம்தான் இன்று கேட்டு ரசிக்க முடிகின்றது. எனவே ஒலிப்பதிவு நாடா, சங்கீதத் துறையின் வள்ர்ச்சிக்கு பயன்படும் சாதனங்களில் முக்கியமானதொன்றாகும்.

**(7)** சிரித்திரன் வாசகர்களுக்கு தாங்கள் விசேடமாக கூற விரும்புவது என்ன?

மங்கள இசையை சிரித்திரன் வாசகர்கள் நன்றாக ரசிக்கிறார்கள் என்பதை நினைக்கப் பூரிப்படைகிறேன். மங்கள இசையின் ரசிகத் தன்மை மென்மேலும் வளர வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

**தொகுத்தவர். நா. இரகுநாதன்.**

### கரடிக் கணேசன்

கரடிக் கணேசனிடம் வாய்வீரம் அதிகம். சந்தியில் சில நண்பர்களுக்கு மத்தியில் நின்று வெட்டித் தள்ளினான். "தம்பி! இந்தக் கணேசன் தேவையில்லாத சோலியளுக்குப் போகமாட்டான் வலிய வந்தா விடவும் மாட்டான். எதுக்கும் பின் வாங்கான்".

பக்கத்தில் நின்ற நண்பன் சொன்னான்: "ஓமோம், முந்திப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்தில, வகுப்பிலையும் இவன் பின் வாங்கான்".

**- பொ. சி**

### பேரினவாதத்தால் பேரிழப்பு!

இயற்கையின் தோரணங்களாகிய கொண்டல் பூக்கள் அந்தக் காளி கோவில் வீதியை அலங்கரிக்கும் சிறுவயதில் பார்த்த காட்சி இன்றும் பசுமையாக செழுமையாக இருக்கிறது. அருகாமையில் முருகன் கோவில். வீதியில் ஒரு நிரந்தரமான கூத்துக் கொட்டகை. நெல்லியடி கலைஞர்களால் கனத்த பூமி. அண்ணாவி ஆறுமுகம், கிருஷ்ணாள்வார், கந்தவனம் (ஐயா), கறுப்பையா, பவுண்டின் கிருஷ்ணன், அருளம்பலம், இயமன் வேலாயுதம் போன்றோர் நடிப்புக் கலையில் புகழ் பூத்துக் குலுங்கினார்கள். இந்தச் சூழலில் நெல்லை க. பேரன் பிறந்தார்.

அன்பெனும் அத்திவாரத்தில் அவரின் கலைக் கோவில் கட்டப்பட்டது. பேரினவாத ஷெல் பேரனையும் அவரின் துணைவியாரையும் பாலகரையும் எம்மத்தியிலிருந்து பிரித்தது. அவர் கதை, கட்டுரை, என கலையுலகை வளம் படுத்தியவர். அந்த விருட்சம் விழுதுகளுடன் சாய்ந்துவிட்டது.

**குறுமணி!**

### பால பாடம்.

அடுக்களையின் நெருப்பு வெக்கை, பங்குனிக் கோடையின் வறுத்தல் வேறு. கிடந்து வெந்தாள், உள்ளத்திலும் கூடத்தான் புழுக்கம். இந்நேரம் பார்த்தா குழந்தையும் ஓடிவரவேண்டும்? எதையோ கேட்டது. கையின் அலுவலை இடையில் விட்டு வரச் சாத்தியமில்லை. "கொஞ்சம் பொறுங்கோ எடுத்துத் தாறன்" . குழந்தை கேட்பதாயில்லை. அடம் பிடித்தது. இரண்டு மூன்று முறை சமாதானம் சொன்னாள் பலனில்லை. எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "அங்காலபோ சனியனே." முன்னறையில் இருந்த தந்தைக்கு 'சுர்' ரென்ற கோபம். ஓடி வந்தார். "ஏன்டி நாயே குழந்தையோட இப்படியே மரியாதை இல்லாமக் கதைக்கிறது. உன்னப் பாத்துத்தானே அதுவும் பழகும் பிரமசத்தி..."

**செ. பொ. சிவனேஷ்**

**தாய்:** "தம்பி நீ போர் முனைக்கு போய்விட்டாய் என்று கேள்விப்பட்டு உன் பெயரில் அர்ச்சனை செய்தனான்."

**போராளி:** "உங்கட பெயரில் அர்ச்சனை செய்யுங்கோ, உங்கட மனத்தை திடப்படுத்த".

# நேயம் நயந்தவை

## (வாசகர் கடிதம்)

பண்ணாகம்.
சுழிபுரம்.
8/8/1991

சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கு,

ஐயா!

தங்கள் ஆடி, ஆவணி சிரித்திரன் கண்டு சிந்தை மகிழ்ந்தேன். கருத்தமைந்த கட்டுரைகளும் துன்பத்தில் வாழும் எம்மை கணப்பொழுது மறக்கவைக்கும் நகைச் சுவைகளும் மிக இனிமையானவை. சிந்திக்கச் செய்யும் சிறு துணுக்குகள் சிறப்பாக சிரித்திரனை அலங்கரிக்கின்றன. மென் மேலும் வாழ வளர வாழ்த்துக்கள்.

-நன்றி-

சிரித்திரன் வாசகன்
வே. ஜெயகுரு
-பண்ணாகம்-

★

குவளை
நவிண்டில்
கரவெட்டி
13-8-1991

ஆசிரியர் சிரித்திரன்,

அன்பு சிரிப்பு ஆசிரியர் அவர்கட்கு!

தாங்கள் சிலகாலம் சுகயீனமாக இருந்ததை அறிந்தேன். அந்த இடைவெளியில் சிரித்திரன் வராததை இட்டு மிகக் கவலை அடைந்தேன். மீண்டும் சிரித்திரனின் பவனி எம்யாவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியே.

சிரித்திரனின் வளர்ச்சிக்கு எம் வாழ்த்துக்கள்.

சிரித்திரன் அபிமானி
த. சுதன்

★

பசுபதி கருணாகரன்,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

சிரித்திரன் ஆசிரியருக்கு,

ஐயா!

சிரித்திரன் சஞ்சிகை வெளிவருவது மாதத்தில் எனக்கு கிடைக்கும் தேன் அமுதமாகும். அதோடு மகுடி பதில்களை கொண்டு என் சந்தேகங்கள் தீர்க்கக்கூடியதாக உள்ளது. மேலும் சிரித்திரன் எத்தடங்கலும் இன்றி வெளிவர இறைவனை வேண்டுகிறேன்.

அன்புடன் வாசகன்
பசுபதி கருணாகரன்.

★

ஆசிரியர் சிரித்திரன்

அன்பின் மகுடியாரே!

எம் கேள்விக்கு நீர் தரும் பதில் கண்டு உமது நுண்மாண் நுழைபுலத்தை அறிந்து அதிசயப்பட்டேன். மகிழ்ச்சி அடைந்தேன். தொடரட்டும் உம் சுவையான பதில்கள்.

பண்ணாகம்
தமிழ்நேசன்.

★

அன்பு ஆசிரியருக்கு,

சிரித்திரன் இதழ் கிடைக்கப்பெற்று வாசித்தேன். அருமையான விடயங்களைத் தாங்கிவந்து மனதை மகிழ வைத்தது. ஆயினும் சிறுகதைகள் குறைவாகவே இருந்தது. எழுத்தாளர்களின் தரமான சிறுகதைகளை பிரசுரிப்பதன் மூலம் சிரித்திரனை வளம் பெறச் செய்யலாம். இளம் எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் பிரசுரித்து அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பீர்களா?

செந்தூரன்
சுழிபுரம்.

★

இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் சிரித்திரன் சிரித்திரன் ஆவலுடன் எதிர்பார்க்கிறான். அவர்களின் ஆக்கங்களுக்கு ஊக்கம் கொடுப்பதில் சிரித்திரன் பின்நிற்பதில்லை. எனவே தயங்காது அனுப்பி வையுங்கள்.

- ஆசிரியர் -

★

18. 8. 91

ஐயா! வணக்கம்
படித்தேன்
சுவைத்தேன்
ருசித்தேன்
சிரித்தேன் - சிரித்திரனை
துளித்தேன்-
தமிழ்த்தேன் "சுவடிகள்"
இனித்தேன்.
ஆண்டுகள் நீண்டு வாழ்ந்து- ஐயா நீர்
வேண்டும் பணி புரிவீர்
வித்தகர் சிரித்திரனாய்- என்று
வாழ்த்துகிறேன் (என்) செபத்தோடு.

அருட்திரு
வீ. ஜே. சீவரத்தினம்.

★

சுசீந்திரன், உரன்
மிருசுவில்.

ஐயா,

நான் சிரித்திரனை முன்னர் வெளிவந்த காலத்திலிருந்தே படித்து வருபவன் மீண்டும் சிரித்திரன் வெளிவருவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சிரித்திரன் அபிமானி
சுசீந்திரன்

★

# செய்திச் சுண்டல்

* **"உலகில் ஆயுதபாவனை ஏராளம்,"**
"துப்பாக்கியை நட்டு ஆடுகட்டி மேய்க்கிற காலம் வெகுதூரத்தில் இல்லை" என்கிறார் சின்னக்குட்டி அண்ணர்.

★

* **"முதலமைச்சர் ஜெயலலிதாவின் திடீர் முடிவுகளால் ஈழத்தமிழர் பாதிப்பு."**
"அரசியல் என்பது திடீர் சாம்பார் பண்ணுவது போன்று நினைக்கிறார் முதலமைச்சர்" என்கிறார் ஒய்யப்பங் கங்காணியார்.

★

* **"வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் இல்லை."**
"போராளிகள் மருந்தைப் பாவிக்கிறார்களென்று மருந்துக்குத் தடை, அவர்கள் காற்றைச் சுவாசிப்பதால் காற்றுக்கும் தடைவரும் போல" என்கிறார் திருவள்ளுவர் பொதுசனம்.

★

* **"இராணுவ நடவடிக்கைகளால் கிழக்கில் 446 ஆலயங்கள் சேதம்."**
"கத்தறகம் தெய்யோவை வணங்கிவிட்டுத்தான் ஆலயங்களுக்குக் குண்டு போட்டிருக்க வேண்டும்" என்கிறார் ஒரு துறவி.

★

* **"சைக்கில் போல்ஸ் விழுங்கினார்கள் இரு வியாபாரிகள்."**
"அவர்கள் கண்கட்டு வித்தை செய்கிறவர்கள் போல" என்கிறார் மெயில்வாகனத்தார்.

* **"கடல் அரிப்பினால் வடக்கு பாதிக்கப்படுகிறது."**
"முதலில்கடற்படை அரிப்பைக் கவனிப்போம்" என்கிறார் ஒரு போராளி.

★

* **"தம்பலகாமத்தில் சேவல்கள் படையினரால் ஏப்பம். குயில்களே கூவி மக்களைத் துயில் எழுப்புகின்றன."**
"ஐயோ! குயில்களையும் ஏப்பமிடப் போகிறார்களே!" என்கிறார் ஓர் பல்கலைக்கழக இசைக் கல்லூரி மாணவி.

★

* **"போராளிகளிற்கு அறிவிக்கும் எச்சரிக்கை மணி எனக் காரணங்காட்டி, தம்பலகாமம் ஆதி கோணநாயகர் கோயிலில் மணி அடிக்கப் படையினர் தடை."**
"கோயில் மணி ஓசை கேட்டு ஓசைப்படுகிறார்களே இராணுவ வீரர்கள்!" என்கிறார் கோயில் அர்ச்சகர்.

★

* **"உள்நாட்டு விடயத்தில் அந்நிய நாட்டவர் தலையிடக் கூடாது என அரசுத் தலைவர் தெரிவிப்பு."**
"அந்நிய நாட்டு நிதிதான் வேண்டும், நீதியல்ல" என்கிறார் சவாரித் தம்பர்.

---

## பெயர் பெற்ற வீதிகள்

தமிழீழத்தின் ஒவ்வொரு வீதிகளிற்கும் மாவீரர்தம் பெயர்களின் பெரமை. இது போல 'பாரிஸ்' நகர வீதிகளிற்கு -கலைஞர்கள் பெயர்களால்.

ஒளிதரு மரங்களுக்காக (மின்கம்பங்களுக்காக) நிழல் தரு மரங்கள் அகற்றிய மனிதன் இன்று ஒளியும் இல்லாமல் நிழலும் இல்லாமல் ஒழிகிறான்.

"அப்பியாசத்துக்கு ஏன் 'டம்பெல்ச' புளியறீங்க?
இந்த இடியப்பத்தை புளிஞ்சு தந்தா என்ன?
- அதிமதுரம் -

# குரு(தி)ஷேத்திரம்

அவர் ஒரு வாத்தியார், குடியேற்றத்தின் கொடுமையை அனுபவித்த மணலாறு மாவட்டத்தைச் சேர்ந்த இவரும், இவரைப் போலவே வாத்தியார் பணியில் ஈடுபடும் இவருடைய இன்னொரு சகோதரரும் துணைப்படையில் பயிற்சி பெற்றவர்கள், அந்த மண்ணின் தேவை கருதி தோளில் துப்பாக்கியுடனேயே பாடசாலைக்குச் செல்பவர்கள். இவரது இன்னொரு தம்பி 85ம் ஆண்டில் நிகழ்ந்த இராணுவ முகாம் தாக்குதல் ஒன்றின் போது வீரமரணமெய்தி விட்டார். மற்றொரு தம்பி இப்போதும் போர்முனையில் உள்ளார். மொத்தத்தில் விடுதலைப் போராட்டத்தில் ஊறிய குடும்பம் அது.

வாத்தியாரிற்கு மூன்று பிள்ளைகள். இவர்களில் மூத்தவள் பெண்பிள்ளை. இவள் தனது பதின்நான்காம் வயதின் ஆரம்பத்திலேயே போராட்டத்தில் இணைந்து கொண்டாள். சமுத்திரத்தில் பிறந்த மீன்குஞ்சை தொட்டியில் வளர்க்கமுடியுமா? வாத்தியாரும் மனப்பூர்2மாக வாழ்த்தி மகளுக்கு விடை தந்தார்.

இரு நாட்டுப் படைகளும் வாரக் கணக்கில் பொருதிய கட்டைக்காடு மோதலில் தனது மகளும் களத்தில் நிற்கிறாள் என்ற செய்தி வாத்தியாருக்குத் தெரிந்தது. மிகப் பெரிய மோதலில் மகள் பங்கேற்கிறாள் என்ற பெருமிதம் இருந்தாலும், நாளாந்தம் பத்திரிகையில் வரும் வீரமரணமெய்தியோர் பட்டியலையும், வைத்தியத்திற்காக வந்த காயமடைந்தோர் பட்டியலையும் பார்த்துக்கொள்வார். எல்லோருமே எமது பிள்ளைகள் -எமது சகோதரர்கள் என்ற உணர்விருந்தாலும் அப்பா என்ற அந்தஸ்த்தை அளித்த மகளைப் பற்றி -அவள் நிலையைப் பற்றி அறிந்துகொள்ளும் அவசரம் -துடிப்பு அவரிற்கு வராமல் விடுமா? இதை விட இந்த மண் எங்கும் தெரிந்த மாற்றங்கள் -உணர்வுகள் அவரையும் பாதித்தன. மகள் போர்க்களத்தில் நிற்கும் காட்சிதனை தன் மனக்கண்ணால் கண்டார். தன் உள்ளுணர்வுகளை எல்லாம் ஒரு கவிதையாய் வடித்தார். அதனை வானொலியில் ஒலிபரப்புவதற்குக் கொடுத்தார். அங்கிருந்து தனது தற்காலிக இருப்பிடத்திற்குத் திரும்பிய அவருக்கு ஒரு செய்தி காத்திருந்தது -"மகள் போர்க்களத்தில் காயமுற்று சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். அப்பாவைப் பார்க்க ஆசைப்படுகிறாள்," என்பதே அது.

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்களே! ஒரு கணம் ஆடித்தான் போய்விட்டார் வாத்தியார். மறுகணம் "அவள் ஒரு குழந்தை, எனது வாட்டம் அவளுக்குத் தெரிந்துவிடக் கூடாது. அவளுக்கு நம்பிக்கை ஊட்ட வேண்டும் போராட்டத்தில் இணைந்து ஒரு வருடத்தின் பின் போர்க்களத்தில் போரிட அவளுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த முதல் தாக்குதலிலேயே காயமடைந்ததனால் பிள்ளை பயந்து போயிருப்பாள். ஆகவே, பயப்படாதே மகளே விரைவில் சுகமாக வேண்டும் என்றெல்லாம் கூறவேண்டும்." இவ்வாறெல்லம் நினைத்தவாறே வைத்தியசாலைக்குள் காலடி எடுத்து வைத்தார். மகளின் அருகே சென்றார். மகளும் அப்பாவைக் கண்டு கொண்டாள். ஒரு கையால் அவரின் கரங்களைப் பற்றினாள்.

"அப்பா!" - குரலின் வித்தியாசம் காயத்தின் தன்மையை வெளிப்படுத்தியது. தாடையெலும்பில் விழுந்த சூடு, வாய் திறந்து இயல்பாகப் பேசவிடவில்லை. பற்களிடையே வரும் அந்த வித்தியாசமான வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேட்டார் வாத்தியார். "அப்பா..... .. மனமாரச் சுட்டன் அப்பா," ... ஆறுதல் கூறப்போன வாத்தியாருக்கு மகளின் கூற்று மலைப்பைக் கொடுத்தது. ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அவர் மௌனியானார். மகள் தொடர்ந்தாள் "அப்பா..... மனமாரச் சுட்டன் அப்பா. என்ர நீண்டநாள் ஆசை இப்பதான் நிறைவேறிச்சு. இந்தத் தாக்குதலுக்கும் முதலில் என்னை விடேல்ல. நான்தான் நான் இயக்கத்துக்குச் சேர்ந்து சரியா ஒரு வருஷமாச்சு. இண்டைக்கு சண்டைக்குப் போக எனக்குக் கட்டாயம் சந்தர்ப்பம் தரவேணும் எண்டு எங்கட குறூப் லீடரிட்ட சண்டை பிடிச்சன். சொர்ணம் மாமாதான் எங்கட குறூப் லீடர். என்ர எதிர்பார்ப்பு போலத்தான் சண்டையும் அமைஞ்சுது. கன ஆமிக்காரங்கள் செத்தாங்கள் அந்த ரவுண்ட்ஸ் மழையில எங்கள்ளயும் சில பேருக்குக் காயம். எனக்கும் வாயில வெடி. ஆனாலும் நான் சண்டை பிடிச்சன் அப்பா. ஏனெண்டா இன்னும் வீரமாச் சண்டை பிடிக்க வேணும் எண்ட ஆவேசம் அப்ப எனக்கு இருந்தது. அப்பத்தான் கையில சூடு விழுந்தது. ஆனாலும் ஒற்றைக் கையால சுடத்தான் செய்தன் ஆனா, கொஞ்ச நேரஞ் செல்ல சோர்ந்து போனன்" -களத்தில் சாதித்தவை குறித்து பெருமிதத்துடனும், தொடர்ந்து அச்சாதனை தொடர உடல் நிலை இடங்கொடுக்கவில்லை என்பதைக் கவலையுடனும் கூறினாள். அவள் வார்த்தைகளில் அப்பா -மகள் உறவைவிட இரு போராளிகளுக்கிடையிலான தோழமையே

மேலோங்கி நின்றதை அவர் உணர்ந்தார்.

மகள் மீண்டும் தொடர்ந்தாள்: "சொர்ணம் மாமா இந்தச் சண்டையில் காயம் பட்டிட்டாராம். அவர் எப்படி இருக்கிறார் எண்டு நான் பார்க்க வேணும்" - மகளின் குறை கேட்டதும் "இல்லையம்மா நீ இருக்கிற நிலையில எழும்பிப் போகேலாதம்மா", என்று சொன்னார் வாத்தியார். "சரி..... அப்ப நீங்கள் கட்டாயம் போய் அவரைப் பார்க்க வேணும். பாத்திட்டு இப்ப எனக்கு வந்து அவரைப் பற்றிச் சொல்ல வேணும் கட்டாயம் என்னட்டச் சோல்லிப் போட்டுத்தான் போக வேணும்" -உத்தரவு போன்ற வார்த்தைகள் மகளிடமிருந்து ஒலித்தன. சின்னவயதிலிருந்தே அடம் பிடிக்கும் அவள் சுபாவம் இப்போது தேசவிடுதலைக்காய்...... புல்லரித்துப் போனார் வாத்தியார்.

"இருபத்தைந்து வயது இளம் பெண்ணானாலும் கடைக்குச் செல்வதற்கு ஐந்து வயதுச் சிறுவனைத் துணைக்குக் கொண்டு செல்லும் வழக்கம் இருந்த இந்த மண்ணில் மௌனமாக இப்படி ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது" -இவ்வாறு போர்க்களத்தில் எமது பெண் போராளிகள் நிகழ்த்தும் சாதனை குறித்து ஒரு பத்திரிகையாளர் கூறியதை அவர் நினைவு கூர்ந்தார். அன்றைய சந்திப்பின் போது இவ்வளவு காலமும் தான் சந்தித்த தளபதிகள் -போராளிகள் அனைவரையும் தமது மகள் வடிவத்தில் அவரால் காண முடிந்தது. இப்படி ஒரு மகளைப் பெற்றதற்காகப் பெருமையடைந்தார். இரவு அவர் எழுதிய கவிதை வானொலியில் ஒலிபரப்பாகியது. அதன் ஒவ்வொரு வரிகளும் சத்தியமான கூற்றாக அவர் மனதில் எதிரொலித்தன.

## போராடும்
## என் அன்பு மகள்
## மனக்கண்ணில் தெரிகின்றாள்.

பூப்போன்ற உனது பாதங்கள்
பிஞ்சுக் கரங்கள்
முந்த நாள்
நான் முத்தமிட்டமை
ஏங்கிக் கிடக்கும் தமிழினத்தின் விடிவிற்கு
காணிக்கை நான் கொடுத்தவை
எகிறிப் பாய்ந்து
பதினைந்தே வயதில்
எதிரியை நீ வீழ்த்துகிறாய் - அதோ
என் மனக்கண்ணில் தெரிகிறது!

மத்தியான வெய்யில் - வெறும்
மணல் மேட்டில்
சுட்டுப் பொசுக்கும் வெந்தழலில்
உணவை, உறவை
உறக்கத்தை நீ மறந்து
அப்பாவை, அம்மாவை
முத்தமிட்ட நாள் மறந்து - தமிழ்
மண்ணை முத்தமிட
தயங்காமல்
துப்பாக்கியோடு சுவடுகள் நீ பதிக்கின்றாய்!
அதோ என் மனக்கண்ணில் தெரிகின்றது!

என்ன துணிச்சலடி என் மகளே!
என் நெஞ்சம் விம்முகிறதே!
ஒரு கோடி வெடியதிர
அஞ்சாது முன் பாயும் புலி அணியில் - உன்
பஞ்சுப் பாதங்களிற்குத் தலைவன்
என்ன பலம் தந்தானோ!
அதோ என் மனக்கண்ணில் தெரிகின்றது!

எகிறிப் பாயும் வேங்கைகள்
இடையிடையே
மண்ணை முத்தமிட்டுக் கிடக்கும் தியாகங்கள்
திரும்பும் திசையெல்லாம்
தியாகிகளின் ஊர்கோலம் - தமிழ்
மண்ணெல்லாம் தோரணங்கள்
வீதிகளில் ஏக்கம் நிறைந்த முகங்களின்
தேக்கங்கள்
ஆனையிறவில் உரிமைப் போர்
வரலாற்றை மாற்றும் போர்
அங்கே என் அருமை மகளே
சீற்றம் கொண்ட பெண் புலியாய் - என்
மனக் கண்ணில் தெரிகின்றாய்

உன் உறுதி நானறிந்தேன்
பெற்றதனால் பெருமை.கொண்டேன்
உரம் பெற்ற தலைமையின் கீழ்
உணர்வுப் போர் புரிவதற்கு
உன் தம்பி தங்கை தனை
தவறாமல் இணைத்திடுவேன்
வாழ்வதனை மானமதாய்
மாற்றிய உன் புலிக் கோலம்
அதோ என் மனக்கண்ணில் தெரிகிறது!
மனக் கண்ணில் தெரிகிறது!

# தமிழறிஞர் தனித்துவம்

ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு தனித் தன்மை இருக்கின்றது. மேதைகளிடம் அது மேம்பட்டு மிளிர் கிறது.

நம் மண்ணின் அறிஞர்களும் அவர்களின் தனித்து வமும் இவை!

### தனிநாயகம் அடிகள்

தமிழ் நாட்டில் ஒரு இரவுப் பயணம். இரயிலில் நான் தஞ்சாவூர் சென்று கொண்டிருந்தேன். எனது பெட்டியில் தனிநாயகம் அடிகளும் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் நீண்டநேரம் என் னுடன் உரையாடினார். பின் தனது 'அலார' கெடி யாரத்தில், காலை நான்குமணிக்கு விழித்துக் கொண்ட அவர் சுறுசுறுப்பாய்க் காலைக்கடன்களை முடித்தார். உடனடியாகவே ஒரு புத்தகத்தை, எடுத் துப் படிக்கத் தொடங்கினார். நான் பிரமித்துப் போனேன். 'இதனால்தான் அவரால் ஏராளமான மொழிகளில் பாண்டித்தியம் பெற்று விளங்க விளங்க முடிந்தது' என்று எண்ணிக் கொண்டேன்.

### க. கைலாசபதி

நவீன இலக்கிய விமர்சகர் பேராசிரியர் க. கைலா சபதி அவர்கள் தினகரனில் ஆசிரியராகக் கடமை யாற்றியது ஒருகாலம். அக்காலம் நான் அப்பத்திரி கையில் கருத்தோவியராகக் கடமையாற்றினேன். நான் வரையும் கருத்தோவியங்களை வாங்கி, சற் றுநேரம் உற்றுப்பார்த்துவிட்டு கைலாசபதி அவர்கள், "இதை நீர் வரைவதற்கு தூண்டுகோலாய் இருந்தது இன்ன சூழ்நிலைதான்" என்பார். நான் பிரமித்துப் போவேன். உண்மையிலேயே அவர் சொன்னது அப்படியே அச்சொட்டாக இருக்கும்.

### தாவீது அடிகள்

அறிவிற்காக உயிரைவிட்டவர்கள் யாரேனும் உண்டா?

உண்டு.

நமது 'தாவீது அடிகள்!'

ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூல் நிலை யம் 'யாழ்ப்பாணப் பொது நூலகம்.' ஆறுமுக நாவ லர் தம்கைப்பட எழுதிய ஏட்டுச்சுவடிகளும், 'மட் டுநகர் மாணிக்கம்' விபுலானந்த அடிகளின் ஏட்டுச் சுவடிகளும் இங்கு கண்போல் காக்கப்பட்டு வந்தன.

இனவாதத் தீ தமிழ்மண்ணில் எதைத்தான் விட்டு வைத்தது. இந்த நூலகமும் தப்பமுடியவில்லை. தீ இதனைத் தன் வயிற்றிற்குள் அடக்கிக்கொண்ட ஆனந்தத்தில் வான்வரை ஓங்கி நின்றது. தீச்சுவா லைகளைக் கண்ட தாவீது அடிகள் தம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார். அவர் பலகாலம், அரும்பா டுபட்டு ஆக்கிவைத்த ஆய்வுக்குறிப்புகளும் அங்கு தான் இருந்தன. தாவீது அடிகளிற்கு நெஞ்சுவலி கண்டது. சற்று நேரத்திலேயே மாரடைப்பு வந்து அவர் உயிரைப் பிரித்து விட்டது.

* ○ *

போட்டி:

## தேசத்தை உயர்த்துவோம்

தோழமை மிகு வாசகர்களே!

பொருளாதாரமே ஒரு நாட்டின் முதுகெலும்பு

இன்றைய சூழ்நில்லயில் சுய உற்பத்திகளை மேம்ப டச் செய்து எமது தாயகத்தைத் தலை நிமிர வைப் பது எம் ஒவ்வொருவரதும் அவசியப்பணி.

எனவே இக் கருத்தை மையமாக வைத்து முழுத் தாளின் (புல்ஸ்காப்) ஒரு பக்கத்திற்கு மேற்படாமல் கட்டுரை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

ஆரோக்கியமான கருத்தைக் கொண்ட சிறந்த படைப்பிற்கு 100/-சன்மானம் வழங்கப்படும் ஏனைய தரமானவையும் பிரசுரிக்கப்படும்.

- ஆசிரியர் -

## சுதந்திரோதயம்

அன்றலர்ந்த றோஜாப்பூவை முகர வேண்டுமெனில் அதனுடன் பிறந்த

முட்களின் உறுத்தலையும் பொறுத்துக் கொள்ளத் தான் வேண்டும்...

மலரும் சூரியோதயப் பொழுது புலர வேண்டுமெனில் இரவின்

கனத்த இருள் விலகும்வரை பொறுமையாக இருக் கத்தான் வேண்டும்...

தன்னாட்சியும், இறைமையுள்ள பூரணசுதந்திரம் வேண்டுமெனில்

உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்ப ணித்து சுகங்களை இழந்து-

கரடு முரடான பாதையில்

கடினப் பிரயாணம் செய்தேதான் ஆகவேண்டும்!

- நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் -

# அழைப்பு (வளவை வளவன்)

வசந்த காலத்தை அர்த்தப்படுத்துவதாக அந்தச் சோலை திகழ்ந்தது.

கனிந்து சொரியும் கனிதரு விருட்சங்களில் பறவைகளெல்லாம் கூடிப்பசியாறின. உண்டு களை தீர்ந்த மகிழ்வில் சுவைபாடி மகிழ்ந்தன. ஒரே ஆரவாரந் தான் போங்கள்.

அணில் ஒன்று வாலை ஆட்டி ஆட்டி உச்... உச் ...ச்....ச் என்று தன் வெண்கலக் குரலால் பாடிக் கொம்பரில் ஓடி விளையாடியது.

எங்கோ அண்டங்காகமொன்று தன் தொளதொளத்த குரலால் கா..கா...க்கா.... என்று கதறிக் கரைந்து கொண்டது.

"வயிறு நிறைந்து விட்டால் போதும் கழுதைகள் கூடக் கானம்பாடத் தொடங்கிவிடுகின்றன." என்று அமைதியாகச் சொன்னது குயில். குயிலின் பேச்சில் நிறைந்திருந்த அகம்பாவத்தைப் புரிந்து கொண்ட கொட்டுப்புறாவொன்றும், "வீணான வம்பில் மாட் டாமல் போ" என்று எச்சரித்தது.

"பாடத் தெரியாத புலவர்களெல்லாம் இப்போது பாடலுக்கு இசையமைக்கப் பார்க்கிறார்கள்" என்று கொட்டுப்புறாவை கேலிசெய்தது குயில்.

கொட்டுப்புறாவுக்கு கோபம் பொங்கி எழுந்தது. பாடுவதில் நீ மகா மேதைதான். உலகப் புகழ் பெற்றவர்தான் ஆனால் உன் பாட்டை நீ எங்கிருந்து பாடுகிறாய்? என்பதாவது உனக்குப் புரிகிறதா? உனக் கென்று ஒரு சொந்த வீடற்று இருக்கும் உனக்குப் பாடல் ஒரு கேடா? என்று கேட்டது கொட்டுப் புறா.

அணில் கொட்டுப் புறாவின் நியாயமான கேள்வியை ஆதரிப்பது போல வாலை உயர்த்தி உயர்த்தி உச்.. உச்.. ச்ச்.. என்று பாடியது.

கரிக்குருவிகளும் எருத்துவாற் குருவிகளும் கூடி கீச்சோ.... கீச்சோ..... என்று பாடத்தொடங் கின.

பார்த்தாயா? உன்னைவிடச் சிறிய பறவைகளெல் லாம் தமக்குத் தாமே தனிக்கூடு கட்டிக் கொண்டு கொலுவாயிருந்து பாடுகின்றன. ஆனால் நீ.... இரவல் வீட்டிலிருந்து இதமான பாட்டுப் பாடி ஏதேதோ புசத்தவும் செய்கிறாய். உனது பாடலும் நீயும்..... யாருன்னை மதிக்கிறார்கள். போ போ என்று கொட்டுப் புறா மீண்டும் கூறியது.

குயிலின் சிந்தனையில் பலமான அடியொன்று வீழ்ந் தது.

ஆம் சின்னஞ்சிறிய பறவைகளெல்லம் தனக்கென்று வீடுகட்டிக் கொண்டிருக்கும் போது... எனக்கென்று ஒரு விடு என் இனத்திற்கென்று......

சிந்தனை உணர்வானபோது....

"கூக் கூ குக்கூ.... கூடுகட்டுவோம் கூகூ... கூடுகட்டிக் கூடுங்கள் குக்கூ குக்கூ..." என்று தன் இனத்தை விழித்துக் கூவி அழைத்தது குயில்.

சோலை முழுவதும் குயிலின் அழைப்பு எதிரொலித் துக் கொண்டிருந்தது. சோலையை நாடிப் படைய ணிபோல் பல குயில்கள் எல்லாத் திசைகளிலிருந் தும் பறந்து கொண்டிருந்தன.

---

# குதிரை விட்டான்

ஒரு நாள் ஒரு அரசன் தனது வேலையாள் ஒருவனுடன் காட்டிற்கு வேட்டை ஆடச்சென்றான். அவன் வேட்டை யாடிவிட்டு அரண்மனை செல்ல ஆயத்தமாகியபோது இருட்டி விட்டது. எனவே வேலைக்காரனைப் பார்த்து "நன்றாக இருட்டிவிட்டதால் நாம் இனிப் போய்ச் சேர முடியாது. எனவே இன்றைய இரவைக் கழிப்பதற்கு இங்கேயே தூங்கப் போகிறேன்" அதற்கான ஏற்பாடுகளை செய் என்றான்.

வேலைக்காரனும் அவ்வாறே செய்துவிட்டு மன்னனைத் தூங்குமாறு வேண்டினான். மன்னனும் தூங்குவதற்கு முன் வேலைக்காரனைப் பார்த்து "நான் கொண்டு வந்திருப்பது மிகவும் விலையுயர்ந்த குதிரை அதை யாரேனும் கொண்டு போய் விடுவார்கள். எனவே நீ விழித்திருந்து பார்த்துக் கொள், அதற்கு ஏதாவது ஒன்றைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிரு" என்று கூறிவிட்டுத் தூங்கிவிட் டான்.

அரசன் சிறிது நேரம் தூங்கிவிட்டு வேலைக்காரனைப் பார்த்து "நீ இப்போ எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண் டிருக்கிறாய்? என்று கேட்டான். அதற்கு வேலைக்காரன் "உப்பு கடலில் தானாக விளைந்ததா? அல்லது யாராவது கடலுக்குள் கொட்டியிருக்கிறார்களா? என்றான்.

மேலும் சிறிது நேரம் தூங்கிய பின் அரசன் மீண்டும் அதே கேள்வியை வேலைக்காரனைப் பார்த்துக் கேட் டான். அதற்கு அவன் "வானத்தில் நட்ச்சத்திரங்கள் தானாக வந்ததா? அல்லது அதை யாராவது செய்து விட்டிருக்கிறார்களா" என்றான்.

பின்னர் அரசன் தூங்கிவிட்டு எழுந்த போது விடிந்து விட்டது. அப்பொது அரசன் வேலைக்காரனைப் பார்த்து "இப்போது நீ எதைப்பற்றி சிந்தித்துக் கெண்டிருக்கிறாய்" என்றான். அதற்கு வேலைக்காரன்

"உங்கள் குதிரை தானாக ஓடியதா? அல்லது அதை யாராவது அவிழ்த்துக் கொண்டு ஓடிவிட்டாங்களா?" என்றான்.

- பீ. ரி. சுரேஷ்

## கதைத் தேன்

# தெய்வம்

அவன் அச்சு இயந்திரத்தின் இதயம். ஆம்! தினசரி அதற்கு இயக்கத்தைக் கொடுப்பதுதான் அவனது தொழில். அந்த அச்சகத்திலேயே அவன் தான் முதல்தர தொழிலாளி. நல்லபெயர். அழகான அச்சுப் பதிப்பிற்கு எல்லோர்வசமும் பாராட்டுதல்களைப் பெற்றான். ஆனா லும் ஒரேயொரு குறைபாடு. குதிரைப் பந்தயத்தில் பணத் தைக் கொட்டுவது அவனது தீய பழக்கம். ஒரு நாள், நிர்வாகியிடம் சிறிது தொகையை முற்பணமாகக் கேட் டான். அவர் உருத்திரர் ஆனார். படபடவெனப் பொரிந்து தள்ளினார். மூன்று மாதச் சம்பளத்தைக் கொடுத்து, அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகச் சொன்னார். பணத்தைப் பெற்றுக் கொண்டு அவன் தன் இயந்திரத்தை நோக்கி நடந்தான். அதனை மூன்றுமுறை வலம் வந்து வணங்கினான். வீடு செல்வதற்கென வெளியேறும் தறு வாயில் நிர்வாகி அவனை அழைத்துக் கேட்டார், "நீ ஏன் இயந்திரத்தை வணங்கினாய்? வேறு யாராவது என்றால் வேலையிலிருந்து நீக்கியதற்காக அதில் ஏதாவது பழுதை உண்டாக்கிவிட்டு நழுவியல்லவா இருப்பார்கள்?" அவன் "ஐயா!" என அதிர்ந்து அலறினான். "அப்படிச் சொல் லவே கூடாது ஐயா! அது சாதாரண இயந்திரமா? என் குடும்பத்திற்கு சோறு போட்ட இயந்திரமய்யா! என்னு டைய தெய்வம்!"

தேனுகா

## வள்ளுவ வாக்கு

அறிவு, என்பது போலி ஆபரணம் அல்ல! அது ஒரு வனைக் காக்கவல்ல கவசம்! பகைவர் வெளியில் இருந்து மட்டுமின்றி, உட்புகுந்து அழிக்க முடியாத பாதுகாப்பைத் தரும் உறுதியான அரணும் அறிவேயா கும்.

நாகப (குறள் 42,)

✲ ✲ ✲

★

மெயில்வாகனத்தார்:- "எங்கட பெடியன்கள் மேல்நாட் டுக்கு உழைக்கப் போறது சரி... ஆனா மேல்நாட்ட வரையும் சீதனம் வாங்கப் பழக்கிப் போடுவாங்கள்!"

# பாத்திரம் பத்திரம்

"கையில் வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்யிற்கு அலைவானேன்?" என்பது பண்டைத் தமிழ் பழமொழி.

இது இன்று தமிழர்களிற்கேதான் சிறந்த உதாரணமாக இருக்கின்றது.

ஏனெனில் -

தங்கள் சமையல் பாத்திரங்களைத் தூய்மையாக்க துலங்க வைக்க கொழும்பின் இறக்குமதியையே நம்பியிருந்த நம்மவர் கைகள் இன்று வகையற்றுத் தடுமாறுகின்றது.

- ஆனால்

உள்ளூரிலேயே இயற்கை மூலிகைகளைக் கொண்ட விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட தரமான இரசாய னத்தூள் தயாரிக்கச் சந்தைகளில் தாராளமாகவே கிடைக்கின்றது. பெயர்; "நீம்"

'மில்க்வைற்' நிறுவனம் இதனைத் தயாரித்து வழங்குகி றது.

## மூலிகை மூலை

# நெல்லி ஔடதம்

சேரமான் கைகளில் கிடைத்தது ஒரு அருமருந்து. ஆயுளைக் கெட்டிப்படுத்தும் பெருமருந்து ஆனால், பெயரைக் கேட்டாலோ மிகச் சாதாரணம்தான் -நெல் லிக்கனி. 'தமிழ் நீண்டு வாழ வேண்டும். தமிழ்ப் புலமை ஓங்க வேண்டும், என ஆர்வம் கொண்ட சேரமான் தனக்குக் கிடைத்ததை ஔவைக்கு அளித் தான். இது சரித்திரம். இதன் தாற்பரியமோ இன்று மருத்துவ விஞ்ஞானத்தாலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள ஊட்டச்சத்துக்கள், உயிர்ச்சத்துக்கள் கண்டறியப்பட்டு உடலியல் ரீதியான நன்மைகள், நோய் நிவாரண குணாம்சங்கள் ஆதாரப்படுத்தப்பட் டுள்ளன. இதனாற்தான் பண்டைத் தமிழர் சாதாரண நெல்லிக்கனிக்கு சரித்திர முக்கியத்துவமே கொடுத்துள் ளார்கள். தவிர, அதிலிருந்து ஊறுகாய், வற்றல் மற்றும் பானங்கள் தயாரிக்கவும் கற்றுக் கொண்டார் கள்.

- ஆரோக்கியம் -

## ஆமி அடிச்ச ஷெல் அதிர்ச்சியிலே பிறந்தவனே! ஆராரோ ஆரிவரோ!

"மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே மாமன் அடித்தானோ..." என்றுன்னைச் சீராட்டி தக்காளிப்பழரசமே தாலாட்டு நான் பாட இத்தாலி கனடாவில் இருக்கிறார் மாமி மாமா ஆமி அடிச்ச ஷெல் அதிர்ச்சியிலே பிறந்தவனே மாமி மாமன் போன தேசம் கேட்கும் வரை கதறிஅழு.

தொப்புள் கொடியோடு தொடர்புகள் அறுத்திங்கே நிப்புள் பால்பவுடர் விலையறியாப் பிறந்தவனே ஓடிக்கலோன் பவுடர் கிறேப்வாட்டர் கிறீம் தேடி ஓடிக்களைத்தேன் நான் ஓயாமல் உனக்காக. காமன் விட்டகணை களிப்பினிலே உதித்தவனே சாமான் விற்கும் விலை சரியும்வரை கதறியழு.

ஊர்விட்டு ஓடுகையில் போர்க்கால சூழ்நிலையில் வேர்விட்டு பதிந்தவனே பேர்சொல்லப் பிறந்தவனே அகதியாய் வந்தவேளை அவதியாய்ப் பிறந்தவனே சகதியில் வந்துதித்த சந்தனமே சர்க்கரையே நிவாரணமட்டையில் நின் பெயர் பதியும்வரை நிர்வாண உடம்போடு நிதமும் நீ கதறியழு.

சண்டைத் துவக்குபொம்மை சர்க்கரை இனிப்புவகை இண்டைக் குமக்குத்தர இலங்கை யரசு தடை பண்டைத் தமிழ்பாலன் சிங்கக் குட்டிகளின் சிண்டைப் பிடித்திழுத்து சிரித்து விளையாடினானாம் உண்மைத் துவக்கோடு விளையாடும் நாள்வரை தன்மானம் இழந்ததமிழ் மக்களுக்காய் கதறியழு.

**எஸ். ஜே. பி. ரட்ணதுரை**

## ★ குருவிக் குஞ்சு! ★

**நாக. பத்மநாதன்**

கோழிக் குஞ்சு!
இந்த நினைவில் குழந்தைகள் துள்ளி மகிழ்ந்தன!
"நாளை குஞ்சுகள் பொரிக்கும். கோழி கூட்டிவரும். அப்போ பார்ப்போம்!" என அம்மா எவ்வளவோ சொல்லியும் பிள்ளைகள் இன்றே குதிக்கத் தொடங்கிவிட்டனர்! அவ்வளவு மகிழ்ச்சி!
ஆனால் அப்பா சிரிக்கவில்லை. நெஞ்சம் படபடக்க அவர் இருந்தார்.
'அந்த' முட்டையும் பொரிக்குமா?
-இதுவே அவரது ஏக்கம்!

முட்டைகளுடன் முட்டையாய் அடை வைத்த விசித்திர முட்டை அது! குறளி வித்தைக்காரன் போல் ஒருவன் கொண்டுவந்த முட்டை அது!

"இது எவரும் காணாத காட்டிலைஎடுத்த முட்டை, சாமி. விருப்பணாங் குருவி முட்டை!

இது பொரிச்சு வீட்டிலை வளர்ந்தா நீங்க விரும்பின எல்லாம் கிடைக்கும்" என்றான் அவன்!

பாதிக் காசை குஞ்சு பொரித்த பின் வாங்குவதாகக் கூறி அவன் போய்விட்டான்! அந்த முட்டை பொரிக்குமா என்பதே அப்பாவின் படபடப்பு!

அம்மா கூறிய மறுநாள் வந்தது. விடியவே தாயின் கீழ் உள்ள குஞ்சுகளின் குரல் ஒலித்தன! குழந்தைகள் சிரித்துக் குதித்து மகிழ்ந்தன!

அப்பா தன் பதட்டத்தைக் காட்டாது வந்து பார்த்தார். எல்லாம் வெள்ளையும் மஞ்சளுமான உருண்டைக் குஞ்சுகள். ஒன்று மட்டும் எலும்பும் தோலுமான பேய்க்கருப்புக் குஞ்சு! பார்க்க வெறுப்புத்தான் ஏற்பட்டது.

"வரட்டும் அவன்" என்றபடி நின்றார்!
ஆனால்-
சொல்லி வைத்தாற்போல அந்த விசித்திர வித்தைக்காரனும் வந்தான்!

"என்னடா மடையா! விருப்பணாங் குருவி எண்டு ஏமாத்தினாய்? பொரிச்ச குஞ்சைப்பார்! அது விருப்பு இல்லை, வெறுப்பணாங் குஞ்சடா! வெறுப்பணாங் குஞ்சு!" என்று கர்ச்சித்தார் அப்பா!

"சரிதானே சாமி? விருப்புக் குருவி இடும் முட்டை வெறுப்பையும் பொறப்பிக்கும்! அது பொழையில்லைச் சாமி!"

அப்பா விளங்காது குதித்தார்!
அவன் தொடர்ந்து கூறினான்-

"சரி, இன்னொண்டு இருக்கு, அது மாறாது. சின்னனிலும் வடிவுதான், வளர்ந்தாலும் வடிவுதான்"

"என்னடா?"

"ஆமா, அது வீரம் சாமி, வீரம்! இளசிலும் வடிவு! பெரிசிலும் வடிவு வீராங்குருவிக் குஞ்சு வேணுமா சாமி? விலைதான்கூட!"

# சங்ககாலமும் சமகாலமும் (தமிழ்த் தொண்டு)

சங்ககாலப் புலவரான ஔவையாரின் தமிழ்ப் பணியை மெச்சிய "கோரைக்கால் ஆள்வான்" என்ற குறுநில மன்னன் ஔவையாருக்குத் தனது பரிசாக யானை ஒன்று தருவதாக வாக்குறுதி அளித்தான்.

குறுநில மன்னன் குறுகிய மனப்பாங்குடையவன். அவன் ஔவையாரை ஏமாற்றவே திட்டம் போட்டு இருந்தான். இது ஔவையாருக்குத் தெரியாது.

**பொன். பூலோகசிங்கம்**

சில நாட்கள் சென்றபின்னர் ஔவையார் மேற்படி அரசனிடம் சென்று அப்பரிசினைத் தருமாறு கேட்டார். அதற்கு அரசன் தற்போது தனது மாடத்தில் யானைகள் எதுவும் இல்லை எனவும் குதிரையொன்று பரிசாகத் தருவதாகவும் வாக்குறுதி அளித்தான். ஔவையார் அவனின் சொல்லை நம்பி, சில நாட்கள் சென்றபின்னர் மீண்டும் அரசனிடம் சென்று தனக்குத் தருவதாகச் சொன்ன குதிரையைத் தருமாறு கேட்டார். அதற்கு அரசன் தன்னுடைய லாயத்தில் இப்போது குதிரைகள் எதுவும் இல்லை என்றும் அதற்குப் பதிலாக எருமைகள் இரண்டு பரிசாகத் தருவதாகவும் வாக்குறுதியளித்தான். மேலும் சில நாட்கள் நகர்ந்தன. பொறுமை இழந்த ஔவையார் மீண்டும் அரசனிடம் சென்று தனக்கு வாக்குறுதியளித்தபடி இரண்டு எருமைகளையும் கேட்டார். அதற்கு அரசன் தனது நன்செய் நிலத்தில் இப்போது எருமைகள் எதுவும் இல்லை எனவும், எருது ஒன்று பரிசாகத் தருவதாகவும் சொன்னான். பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்ட நிலையிலும் ஔவையார் மேலும் பொறுமையோடு சில நாட்கள் காத்திருந்தார். பின்னர் ஒரு நாள் அரசனிடம் சென்று தனது பரிசினைக் கேட்டார். அதற்கு அரசன் தன்னுடைய மாட்டுத் தொழுவத்தில் இப்போது எருதுகள் எதுவும் இல்லை என்றும் எருதுக்குப் பதிலாக ஔவையாருக்கு ஒரு புடவை பரிசளிப்பதாகவும் சொன்னான். ஔவையாருக்கு அவமானம் ஒருபுறம், ஆத்திரம் மறுபுறம். கோபத்தால் கண்கள் சிவந்தன. பரிசு வாங்கி பரிசுகெட விரும்பவில்லை. அரசனின் இழிசெயலை பாட்டால் வைது ஒரு செய்யுள் இயற்றினார். அச் செய்யுள் பின்வறுமாறு:-

கரியாகி, பரியாகி
காரெருமை தானாகி
எருதாகி முழுப்புடவையாகி திரி திரியாய்
தேரைக்கால் பெற்று மிக
தேய்ந்து கால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆள்வான்
கொடை

## சமகால நிகழ்வு ஒன்று

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியின் புகழ் பூத்த புலமை சான்ற பெருமகன் பண்டிதர் கந்தமுருகேசனாரின் முதல் மாணவனும் தமிழ் அறிஞனுமாகிய தமிழ் அன்பர் ஒருவர்தான் நித்தமும் தனது தமிழ்ப் பணிக்காக வடமராட்சியிலிருந்து வலிகாமம் வந்து செல்லத் தனக்கு துவிச்சக்கரவண்டி ஒன்று தந்துதவுமாறு கேட்டு விடுதலை இயக்கத்தின் கலை, பண்பாட்டு கழக பொறுப்பாளருக்கு செய்யுள் வடிவில் விண்ணப்பம் ஒன்றை அனுப்பி வைத்தார். அச் செய்யுள் இதுதான்.

**கொந்துமணி தேர் வேண்டேன் கோமகனே உன்னிடத்தில்**
**கந்து கடாக்களிறும் யான் வேண்டேன் முன் நீயழைத்தால்**
**வந்து செல்ல வளமாக மனமகிழ்ந்தே ஒரு சிறிய**
**உந்துருளி தந்துதவ வல்லையோ உடன் பிறப்பே.**

பாடலைப் படித்த கவிஞர் பெருமான் பேரறிஞனின் சொற்சுவை பொருட்சுவையில் சொக்கியே போனார். மேற்படி விடயம் விடுதலை ஸ்தாபனத்தின் தலைமைப்பீடத்தின் செவிகளுக்கும் எட்டியது. விடுதலை இயக்கத் தலைவரோ தினசரிப் பத்திரிகையை எடுத்தாலும் முதலில் அதிலுள்ள கவிதைகளையெல்லாம் ஒன்றும் விடாமல் படித்துவிட்டுத்தான் முதல் பக்கச் செய்தியை கூடப் படிக்கும் கலாரசிகன். பிறகு என்ன? துவிச்சக்கரவண்டி கேட்ட தமிழ் அறிஞனுக்கு இப்போது "சாளி" மோட்டார் சைக்கிள் ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எழுத்தறிந்து கலை பயின்ற இந்தப் பழுத்த பேறிஞர் தனக்கு வழங்கப்பட்ட சாளிக்கு தனித்தமிழில் "செம்பவளவல்லி" எனப் பெயர் சூட்டி தினமும் சவாரி செய்கின்றார்.

* * *

# தூண்டாமணி

# கதை

## கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்

**எழுதியவர்: புதுமைப்பித்தன்**

கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமீ" என்று உள்ளங் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்காரன்.

கடவுளை ஆசீர்வாதம் பண்ணுவதாவது!

"அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் குடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன்"
"மகா நியாயத்துக் கட்டுப்பட்டவன்தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்குக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நாள் முச்சுடும் வெளியிலே ஓடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல?

கடவுளுக்குக் கண்ணில்லே; உன்னியே சொல்ல வச்சான்! என்னியே கேக்க வச்சான்" என்று சொல்லிக் கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்.

கடவுள் வாய்விட்டு உரக்கச் சிரித்தார். விழுந்து விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி குளிர்ச்சி.

"இதுதான் பூலோகம்" என்றார் கந்தசாமிப்பிள்ளை.

"இவ்வளவு தானா!" என்றார் கடவுள்.

---

கொழும்பில் படித்துக் கொண்டிருந்த தன் மகனைப் பார்க்கப் போன தம்பர் கண்ட காட்சி.
போத்தலும் கிளாசும், சீட்டு விளையாட்டுமாய் மகனை.......
உடனே தம்பர் சொன்னார்:
"யாழ்ப்பாணத்தில் கொம்மா மூன்று மிளகும் தண்ணீரும்...... இஞ்சை நீ முன்நூற்றி நாலும் தண்ணியும்....... "

---

### எழுதாத கவிதை

மீட்கப்பட்ட - எம்
மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்,
அவை
உங்கள்
கண்ணீர் அஞ்சலிக்காகவோ
அன்றேல்
மலர் வளைய
மரியாதைக்காகவோ அல்ல!
எம் மண்ணின்
மறு வாழ்விற்கு
உங்கள் மன உறுதி
மகுடம் சூட்ட வேண்டும்
என்பதற்காகவே... ...

### மானுடம் மீட்க

மரணிக்கப் போகும்
மானுடத்தை மீட்க
வலிந்தே கரங்கள்
பற்றிப் பிணையட்டும்
இறக்கப்போவது
எதிரியின்
தர்மிஷ்டங்களும்
தார்மீகங்களுந்தான்
என்பதை
உறுதியாய் உணர்த்த
ஒன்றாய் இணையுங்கள்
உரிமையை மீட்கும்
கடமையை உணர்ந்தே வாருங்கள்
உண்மை அதுவென
அறிந்தே வாருங்கள்

மாவீரர் கப்டன் வானதி
(பத்மசோதி சண்முகநாதபிள்ளை)
நன்றி: "சுதந்திரப் பறவைகள்"
ஆடி, ஆவணி - 1991.

# நிகழ்காலச் சூழ்நிலையில்;

# ஒரு நிகரில்லாச் சாதனை!



கல்வியறிவே, மனிதரின் உண்மையான கண் என்றான் வள்ளுவன் இது உலகப் பொதுமறையின் தீர்ப்பு என்றால், ஈழத்தமிழர்களை அதன் வார்ப்பு எனலாம்.

திருக்குறள் வரிகளின் ஊடாகத், தனது "திருக்குரல்" ஒலியை எழுப்பிக்கொண்டேயிருக்கும் வள்ளுவனே வியப்பெய்தும்படியாக; எங்கள் யுத்த பூமியின் பயங்கரங்களுக்கு மத்தியிலும், சத்தம் போடாமலே சில சாதனையாளர்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வரிசையிலே வந்து சேர்ந்திருக்கும், வாலிபச் சிறுதளிர்தான், செல்வன். குருசாமி சுஜாஹரன்! வட்டுக்கோட்டை 'யாழ்ப்பாணக்கல்லூரி' மாணவனாகிய சுஜாஹரன், அராலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்.

விஞ்ஞானப் பாடப்பிரிவில் நான்கு பாடங்களிலும் "A" -அதிதிறமைச் சித்திகளைப் பெற்றுத் தான் பிறந்த ஈழத்தமிழ் மண்ணுக்கும், கல்வி கற்றுத்தந்த கல்லூரிக்கும் பெரும்புகழையும் பெருமையையும் ஈட்டித் தந்திருக்கும் செல்வன். சுஜாஹரனை அவரது வீட்டிலே சந்தித்து உரையாடினேன். அந்நேரத்தில், அவர் என்னுடன் கதைத்தவற்றை, "சிரித்திரன்" வாசகர்களுக்கு இங்கே சுருக்கமாகத் தருகின்றேன்.

விஞ்ஞானத்துறைக்கல்வி, தன்னை வெகுவாக ஈர்த்துக் கவர்ந்தபோதும்; கலைத்துறையின் மீது தனக்கு மிகுந்த ஈடுபாடும், ஆர்வமும் உள்ளதாகச் சொல்கின்றார். பொதுவாகவே, விஞ்ஞானத்துறை மாணவர் மாணவிகளுக்குக் கலைத்துறையின் மிது ஆர்வமோ, ஈடுபாடோ இருக்காது. ஆனால் சுஜாஹரன் போன்ற ஒரு சிலர் அதற்கு விதிவிலக்காக உள்ளமை, க்லையின் தனித்துவமேன்மையை உணர்த்தி நிற்கின்றது

யாழ்ப்பாணக்கல்லூரியின் தனிப்புகழ் வாய்ந்த நூலாகமும், அதன் கட்டிட அமைப்பும்; யாழ்ப்பாண மாவட்டத்திலேயே, விஞ்ஞானச் செயல்முறைக் கல்வி வசதிகள் மிகுந்த உயிரியல், பௌதீகவியல். இரசாயனவியல் ஆய்வுகூடங்களும்; அவற்றின் உபயோகங்களும்; தனது உயர்தரக் கல்வி முன்னேற்றத்திற்கு பெரிதும் உறுதுணை புரிந்தன என்பதை அமுத்தந்திருத்தமாகச் சொன்னார்.

கல்லூரி முதல்வர், வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களை நன்றியுணர்வுடன் குறிப்பிட்டுச் சொல்லிய சுஜாஹரன்; தன்கல்வித்திறமையின் மீது தனக்கிருந்த தன்னம்பிக்கையைவிட, அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசனுக்கு இருந்த உறுதிமிகுந்த நம்பிக்கையை எண்ணி எண்ணி நெகிழ்ந்து போகிறார்.

ஏற்றிவிட்ட ஏணிகளை, ஏளனத்தோடு எட்டி உதைக்கின்ற, இன்றைய பல மாணவர்களின் இடையே முற்றிலும் வித்தியாசமானவராகக் காட்சி தருகின்றார். ஆம், அவரது கல்வியுயர்வு, எந்த விதத்திலும் அவரது இயல்பான நற்பண்புகளைப் பாதிக்கவில்லை என்பது தெளிவு, ஏனெனில் இந்த மண்ணிலே கொஞ்சம் கல்விகற்றுப், பட்டங்கள் பெற்றாலே போதும்; குதித்துக் குதித்துக் கொட்டமடிக்கும் "கல்விமான்கள்" பலர் உளர்.

நாளைய மருத்துவ உலகத்தில், ஒரு நம்பிக்கை நிறைந்த மருத்துவனாகத் தன்னை அடையாளங் காட்டி, அரும்பெரும் சேவையாற்றவுள்ள நமது சுஜாஹரன்; காலஞ்சென்ற மருத்துவகலாநிதி கணேஷரட்ணத்தின் ஒன்று விட்ட தம்பி ஆவார்.

மிக இளம் வயதிலேயே திருமணம் ஆகாமலே மரணமடைந்த மருத்துவ கலாநிதி கணேஷரட்ணத்துடனும், அவரது குடும்பத்தினரோடும். சொந்த உறவின் நிமித்தம் நெருங்கிப்பழகிய சுஜாஹரன், திரு, கணேஷரட்ணம் இடைநடுவில் விட்டுச் சென்ற மருத்துவப் பணியை, அவர் சார்பாக எதிர்காலத்திலே முழுமுனைப்போடு மேற்கொள்ள நல்லாசி கூறிவாழ்த்துவோம்!

செவ்வி தொகுப்பு:- ஜெ. கி. ஜெயசீலன்.

---

**சின்னக்குட்டி:-**"என்ன பேக்கறி மாமா நாடியில கை வைச்சுக்கொண்டு ...... அப்படி என்ன கவலை?

**பேக்கறிமாமா:-**"பாருங்க சின்னக்குட்டி. இவன் முத்துத்தம்பி சிங்களம் சொல்லித்தரச் சொன்னது. நா சொல்லிக் குடுத்தது. இப்ப அவன் தலகறணமா சிங்களத்தில எழுதுறான் எண்ட மகளுக்கு லவ் லெட்டர்!"

---

## நாளைய பொருளாதாரத்திற்கு......

# இன்றே வித்திடுவோம் !



தமிழர் புனர்வாழ்வுக் கழகம்